ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருத்தங்கல்

## ஸ்தலபுராண வசனம்.

இது

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்த மங்கலம் ஆந்திர திராவிட
கீர்வாணவித்துவானும், இராயலுவய்யங்காரவர்கள்
குமாரரும் ஷை திருத்தங்கல் நின்ற நாராயணப்
பெருமாள் கோவில் ஸ்தானீகருமாகிய

எம். ஆர். ஸ்ரீநிவாசய்யங்காரவர்களால்

திருத்தங்கல் ஸ்தாநீகம்
வேங்கட்டராமய்யங்காரவர்கள் குமாரர்
வெ. நாரணையங்காரவர்கள்
விருப்பத்தின்படி
சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று
ஷை வெ. நாரணையங்காரவர்களாலும்
மங்கலம் நா. அநந்தய்யங்காரவர்களாலும்

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையிற்
பதிப்பிடப்பெற்றது.

[அணா 8.

1913

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருத்தங்கல்

## ஸ்தலபுராண வசனம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
MADRAS
334/2-13

இது

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்த மங்கலம் ஆந்திர திராவிட
கீர்வாண வித்துவானும், இராயலுவய்யங்காரவர்கள்
குமாரரும் ஷை திருத்தங்கல் நின்ற நாராயணப்
பெருமாள் கோவில் ஸ்தானீகருமாகிய

எம். ஆர். ஸ்ரீநிவாசய்யங்காரவர்களால்

திருத்தங்கல் ஸ்தாநீகம்

வெங்கட்டராமய்யங்காரவர்கள் குமாரர்

வெ. நாரணையங்காரவர்கள்

விருப்பத்தின்படி

சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று

ஷை வெ. நாரணையங்காரவர்களாலும்

மங்கலம் நா. அநந்தய்யங்காரவர்களாலும்

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்


பதிப்பிக்கப்பெற்றது.

விலை] [அணா 8.

1913.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

REGISTERED 22 APR 1913 OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS



பாண்டியநாட்டில் ஐந்தாம் திருப்பதியாகிய

# திருத்தங்கல்

# ஸ்தலபுராணம்.

ஷை திவ்யதேசம் திருமங்கையாழ்வார் மங்களா ஸாஸனம்.

## முதலாவது அத்தியாயம்.

---

### நம்மாழ்வார் ஸ்துதி.

நீர்பூத்த நீரதத்தை நேர்நிறமா லிணையடியாய் நின்று நீர்சூழ்
பார்பூத்த பரசமய விருளிரிய வருபரிதிப் பண்பு மெய்தித்
தார்பூத்த மதுரகவி யமிதமுத முதவுதமிழ்த் தாமம் வேய்ந்த
கார்பூத்த பொழிலெழிலார் குருகூர்மா றன்கழலைக் கருதி வாழ்வாம்.

நூல்.

திங்கள்சுதன் புதன்புதல்வன் புரூரவன்தா ரணியனைத்துஞ்
செங்கோ லோச்சி
மங்கலில்வான் புகழ்படைத்தோன் மால்பதமு மடைந்துய்ய
மனத்துட் கொண்டு
துங்கமுனி புங்கவர்கள் சூழ்குழ லெய்தவவன்
றோன்று நல்யாழ்ச்
செங்கரநா ரதனவற்குச் சிகைத்தி ரந்தெழில்சொல்
சீர்த்தி விள்வாம்.

ஸ்ரீய: பதியாகிய எம்பெருமானை நமஸ்கரித்து நைமிசாரணிய வாசிகளாகிய முனிபுங்கவர்கள் பௌராணிக சிரேஷ்டராகிய சூத புராணிகரைப் பார்த்துக் கூறுகின்றனர். மகாபாகவததிலகரே! தேவரீரிடமிருந்து அனேக தருமங்களும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதிவருணங்களின் விவரமும் பிரமசரியம் கிருகஸ்தம் வானப்பிரஸ்தம் சன்னியாசமாகிய ஈரிரண்டாச்சிரமக்கிரமங்களும், தேவர் மானிடர் விலங்கு புள் முதலியவற்றினுற் பத்தியும், தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் ஆகிய சதுர்வித புருஷார்த்தங்களை யடையும் வழியும் உடலெடுத்தவ ரடையும் கர்மபந்த விவரமும், ஸர்வேச்சுரனுடைய அவதாரங்களும், அவருடைய பர வியூக விபவ அந்தரியாமி அர்ச்சை முதலிய ஸ்வரூப விவரணமும், அறுபத்துநாலு கலைகளின் பேதங்களும், பூலோக, புவலோக சுவலோக, சனலோக, தபோலோக, மகலோக, சத்திய லோகங்களாகிய மேலேழுலகங்களும், அதல விதல சுதல தலாதல மகாதல ரஸாதல பாதாளங்களாகிய கீழேழுலகங்களு மிருக்கும் நிலைமையும், புண்ணிய க்ஷேத்திரங்களின் மகிமையும், புண்ணிய தேவாலயங்களின் பெருமையும், புண்ணிய தீர்த்தங்களின மான்மியமும், கங்கை முதலிய நதிகளின் விசேஷமும் விஸ்தாரமாகச் சொல்லக் கேட்டோம். ஸ்ரீதேவியானவள் வாசம்பண்ணும்படியான க்ஷேத்திரங்கள் அனேகம் உள்ளனவென்றும், அவற்றுள் தென்றிசையில் ஸ்ரீக்ஷேத்திரம் அதாவது திருத்தங்கல் என்ற வொருதிவ்விய தேசம் இருப்பதாயும் புகன்றீர். அந்த திவ்விய தேசத்தின் மகத்துவத்தைக் கேட்க எங்கட்குப் பேராவலிருக்கின்றது. ஆதலால் கருணைகூர்ந்து அந்த ஸ்ரீக்ஷேத்திரத்தின் மகிமையைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தியா நின்ற முனிசிரேஷ்டர்களை நோக்கிச் சூதர்கூறுகின்றார்.

வாரீர் ரிஷிபுங்கவர்களே உங்களைப்போல் சகல சாஸ்திர பாரங்கதர்களாயுள்ளவர்கள் கிடைப்பதருமை. புண்ணிய மயமாயும் புண்ணியாபிவிர்த்தி செய்யக் கூடியதாயும் உள்ள ஸ்ரீக்ஷேத்திர மகத்துவம்அதிரகசியமானது. அதை உங்களுக்குச்சொல்லுகின்றேன்.அதிக சிரத்தையோடு கேட்பீர்களாக. யாவர் ஒருவர் இந்த ஸ்ரீக்ஷேத்திர மாகாத்மியத்தை சிரத்தையுடன் கேட்கின்றனரோ யாவர் சிரத்

தையோடு படிக்கின்றார்களோ அவர்களிடம் எம்பெருமானுக்கு நித்தியானபாயினியான ஸ்ரீதேவி நித்தியவாசம் பண்ணுவள். அவர்கள் சகல விதமான ஆபத்துக்களினின்றும் விடுபட்டவர்களாய், தீர்க்காயுசும் அரோக திட காத்திரமும், சகல ஐசுவரியமும் உள்ளவராய் முடிவில் மோக்ஷமும் அடைவர். இதைப்பூர்வத்தில் வியாச பகவான் எனக்குக் கூறியபடி யான் உங்கட்குக் கூறுகின்றேன்.

சந்திர வம்சத்தில் புரூரவ சக்கிரவர்த்தி யென்றொரு ராஜசார்வபௌமன் உற்பத்தியாயினன். அவன் பொறுமை முதலிய குணங்களையே பூஷணங்களாயணிந்து பஞ்சேந்திரிய நிக்கிரகஞ் செய்து தேவர்தானவர் முதலியவரின் சேனைகளையும் வெற்றி கொண்டு கொடையினால் பஞ்சதருக்களையும் வென்று சமம் தமம் முதலிய குணோபேதனாகவும், தர்ம பரிபாலனத்தில் அதிக சிரத்தை யுடையவனாகவும், தயாகரனாகவும், சீலவானாகவுமிருந்தான். வேதவேதாங்கங்களில் தேர்ச்சி யுள்ளவனாகி அசுவமேதம் முதலியவனேக வேள்விகளை வேட்டுலகனைத்தும் தன் கீர்த்தி பரவுமாறரசாண்டு வந்தான். சத்தியத்தையே நிலை நாட்டித் தன்னாட்டில் எவ்வகை யநீதியும் நிகழாது தண்டிக்கப் படத்தக்கவர்களையே தண்டித்து சிஷ்ட பரிபாலனம் செய்து, வாவி கூப தடாகாதிகளை யுண்டாக்கியும், அனேக தேவாலயங்களை நிருமாணம் செய்தும், அணிமாதி ஐசுவரியங்களையும், இவ்வுலகிலனுபவிக்கும் சகல போகங்களையும் குறைவற அனுபவித்தான். அவனுக்கு மகா பலபராக்கிரமசாலிகளும் தேஜோவான்களுமாகிய புத்திரருண்டாயினர். தனக்கு விருத்தாப்பியம் நேரிட்டவுடனே தன் மந்திரிகளை யழைத்தாலோசித்துத் தன் குமாரர்களுக்குள் முன்னோனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து தனது தர்ம பத்தினியோடு கூட மோக்ஷராஜ்யாபேக்ஷையுள்ளவனாகி தருமாரணியம் புக்கான். அந்த வனமானது சுகம், பிகம், சாரிகை, மயூரம் முதலிய பக்ஷி ஜாலங்களுடைய கிலகில சப்தத்தால் நிறைவுற்றதும், சகல ருதுக்களிலும் உண்டாகும் புஷ்பங்கள் சதா காலமும் புஷ்பித்துப் பிரமானந்தத்தைக் கொடுக்க வல்லதும், பூங்கொத்துகளினின்று பெருக்கெடுத்து ஓடும் தேன்யாறுகளை யுடையதும், தென்னை, புன்னை, மா, பலா, விளா, அசோகம், மகிழ், கதலி,

செண்பகம், தான்றி, தோன்றி, கோங்கு, பலாசம் முதலிய பல விருக்ஷங்கள் வான்வரை நிமிர்ந்து வளர்ந்து பகலவன் கரமும் புக வரிதாயுள்ள சோலைகளை யுடையதும், அப்பியாச பலத்தால் இருக்கு, யஜுசு, சாமம், அதர்வணம் முதலிய வேதங்களையும் வேதாங்கங் களையும் ஓதும், குயில், கிளி முதலிய பக்ஷிகளையுடையதுமாய் விளங் கும். நீவாரம் முதலிய தானியங்களை யங்கு பரிபாலனம் செய்வர்: வேதாத்தியயன நிரதரான பிரமசாரிகள் தங்கள் ஆசாரியர்களுக்கு புஷ்பம், பலம், பத்திரம், தருப்பை, சமித்து முதலியவற்றைச் சேக ரித்துக் கொண்டிருப்பர். அவ்விடத்தில் எப்போதும் பலவகையான யாகங்கள் நடைபெற்று வரும், அவ்விடத்திலுள்ள தபோதனர்கள் சதாகாலமும், வேதாந்த காலக்ஷேபம் செய்து பிரமவிசார முள்ளவ ராய் ஆசிருதர்களுக்கு ஞானோபதேசம் செய்து அவருடைய அஞ் ஞானாந்தகாரத்தைப் போக்குவர். அவ்விடத்திற்கு வரும்அதிதிகளு க்கு முகமலர்ச்சியுடன் உபசாரம் கூறி விருந்தளிப்பர். அத்தகைய தருமாரணியம் அடைந்த புரூரவ சக்கிரவர்த்திக்கு அவ்விடத்திலிருக் கும் முனிவரர் நல்வரவுகூறி யுபசரித்து அர்க்கியம் பாத்தியம் ஆச மனம் முதலியவுதவினர். அவ்வரச சிகாமணியும் ரிஷிகளுக்கு தண் டப்பிரணாமம் பண்ணி யவரனுமதிப்படி யோராசனத்தமர்ந்தான். அப்போது முனிவர்கள் அவ்விராஜனைப் பார்த்து வாராய், சந்திர குலதிலக! நீயும் நின்னைச் சார்ந்தவரும் சுகமா? நின் குடைக் கீழ் தங்கும் உலகனைத்தும் யாதொரு உபத்திரவமுமின்றி க்ஷேமமாயிரு க்கின்றனவா என்று குசலம் வினவினர். அம்மன்னர் பிரானவர் களைப் பார்த்து முனிகுலோத்தமர்களே! தேவரீர்களுடைய கிருபை யின் மகிமையால் என்னாட்டில் யாதொரு குறைவுமில்லை. பிரஜை கள் பரம சந்துஷ்டர்களாயிருக்கின்றனர். தேவரீர்களுடைய கருணை ப்பிரவாகமானது பிராணிகளுடைய தாபத்திரயங்களைப் போக்கி யவர்களை யபிவிர்த்தியாகும்படி செய்ய வல்லதன்றோ? யான் மனு நீதி தவறாது ராஜ்யபரிபாலனம் செய்து சகலமான இம்மைப்பயன் களையும் அனுபவித்தேன். மோக்ஷராஜ்யாபிலாஷை யுள்ளவனாக விங்கு தேவரீர்களைச் சரணம் அடைந்தேன். இவ்வாறுரைத்த புரூரவ சக்கிரவர்த்தியைப் பார்த்து ரிஷிகள் வாராய் புதன்புதல்வ னாகிய ராஜசேகரா! நின்வரவெங்களனைவர்க்கும் பெருமகிழ்ச்சி யளி த்ததென்று கூறியிருந்தனர்.

OFFICE OF THE ... REGISTERED 28 APR 1913 MADRAS.



அத்தருணத்தில் திரிலோகசஞ்சாரியும் மகதிவீணாதாரியும் பிரமபுத்திரருமாகிய நாரதர் விஷ்ணுபதத்தியானம் செய்துகொண்டு விஷ்ணு பதத்தினின்றிறங்கினர். அவரைக்கண்டதும் ஆங்குள்ள முனிவரனைவரும் ஆனந்தக்கடலில் மூழ்கியந்நாரதரையர்க்கிய பாத்தியாதிகளாலுபசரித்து திவ்வியமான ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து குசலம் வினவிபுலகின் கண்ணுள்ள சகலமான புண்ணிய க்ஷேத்திர தீர்த்தாடனம் செய்யக்கொடுத்துவைத்த பரமபாக்கியசாலி தேவரீரன்றோ? வென்று ஸ்தோத்திரம் செய்தனர். அவ்யாழ் முனிவர் அம்முனிவர்களைப்பார்த்துக் கூறத்தொடங்கினர். பரமபாகவதசிரேஷ்டர்காள் கேண்மின். உலகிலுள்ள சகலக்ஷேத்திரங்களுக்குள் சிறந்த க்ஷேத்திரமாகியதும் சகலமான புண்ணியதீர்த்தங்களுக்குள் உயர்ந்த புண்ணிய தீர்த்தமாயதும் விஷ்ணுபக்தாக்கிரகண்ணியர்களாகிய நம் போலியர்களுடைய தரிசனமேயாம். எவ்விடத்தில் பாகவதகோஷ்டி நிகழ்கின்றதோ அவ்விடத்தில் சகலமான தீர்த்தங்களும் க்ஷேத்திரங்களும் உறையும். ஸ்ரீய: பதியாகிய எம்பெருமான் அவ்விடத்தில் நித்தியவாசம் செய்தருளுவர். இங்ஙனம் கூறியநாரதருடைய பவித்திரமான பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்க தெண்டப்பிரணமம் செய்த புரூர்வசக்கிர வர்த்திக்கு நாரத ராசிகூறிக்ஷேமம் விசாரித்து அவ்வேந்தனைங் கெய்தியதற்குக் காரணம் வினவினர். அப்போது அவ்வரசன்பின்வருமாறு கூறினன். சுவாமி! யான் இவ்வுலகிலனுபவிக்கவேண்டிய சகலபோகங்களையும் திருப்தியாக அனுபவித்துவிட்டேன். மறுமைப்பயனடையும் வழியறிந்தனுசரிக்கவிவண் வந்தேன். என் பாக்கிய வசத்தால் தேவரீர் இவ்விடத்திற் கெழுந்தருளினீர். எந்தத்திவ்வியக்ஷேத்திரத்திலிருந்து தவம்பற்றினால் ஸ்ரீமந்நாராயணனை ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி சமேதராகவும் கருடவாகனரூடராகவும் கண்டுகளிகூர்வேன்? அத்தகையபுண்ணியப்பிரதேசம் யாண்டுளதென்பதை யடியேனுக்குத்திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வேண்டிய புரூரவசக்கிரவர்த்தியை நோக்கி நாரதர் கூறுவாராயினர். இஃது பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திரகாண்டத்தில் ஸ்ரீ க்ஷேத்திரமகத்துவத்தில் முதலாவது அத்தியாயம்.

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# இரண்டாவது அத்தியாயம்.

---

பாகமலை மாளிருத்தும் பண்ணவனும் விண்ணரசும் பரசியேத்த
யோகமலைமேற்கொள்பிரான்தேவியர்மற்றிருவரினுமுயர்வானுன்னி
நாகமலை தருதருப்புன் ஞாகம்வளர் தங்கால நகத் தகத்துள் [ம்.
மாகமலையோகியர்கள்வாழ்த்தெடுப்பவந்துதித்தவண்ணஞ் சொல்வா

நாரதர் வாக்கியம்:—தென்றிசையிற் பாண்டிய நாட்டில் க்ஷேத்திரங்களி லெல்லாம் சிறந்ததும் மங்களகரமாகியதுமான ஸ்ரீக்ஷேத்திரமிருக்கின்றது. அந்த க்ஷேத்திரத்திற்கு மேற்றிசையில் தருமகிரி யென்றொரு புண்ணிய சைலமுளது. அவ்வரையை அடுத்து ஸ்ரீவில்லிபுத்தூர் என்று வழங்கும் வராகக்ஷேத்திரமிருக்கிறது. எவ்விடத்தில் ஸ்ரீக்ஷேத்திரமான்மியம் பக்திசிரத்தையுடன் படிக்கப்படுகிறதோ அவ்விடத்தில் எம்பெருமானை யிறையுமகல்கில்லாது ஸ்ரீதேவி ஸ்ரீமந்நாராயணனுடன் பிரசன்னமாயிருக்கின்றாள். யாவர் பக்தி சிரத்தையுடன் படிக்கின்றார்களோ யாவர் கேட்கின்றார்களோ அவர்கட்குச் சகலவிதமான ஐசுவரியங்களும் லக்ஷ்மீ கடாக்ஷத்தாலுண்டாகும். யாவனிந்த ஸ்ரீ க்ஷேத்திரமகத்துவத்தை சிரத்தையோடு கேட்கிறானோ அவன் சகல பாவங்களினின்றும் விடுபட்டவனாய் கடைசியில் சாசுவதமான வைகுண்டபதவி அடைகின்றான். இந்த க்ஷேத்திரத்தைச் சூழ ஒரு யோஜனை தூரம் புண்ணிய க்ஷேத்திரமாகவே இருக்கும். இந்த ஸ்ரீக்ஷேத்திரத்தில் பஞ்ச தீர்த்தங்களும் ஒரு புண்ணிய மலையுமுள. மேலும் அவ்விடத்தில் மிகவும் பாவனங்களான அசுவத்தமுதலிய விருக்ஷங்கள் நிறைவுற்றிருக்கும். அவ்விடத்திலிருக்கும் தபோதனர் வேதவேதாந்தபாரங்கதராய் தேஜஸினால் சூரியன் சந்திரன் அக்கினி இவர்களை வென்றவராயிலங்குவர். சகல பாபங்களையும் போக்கவல்ல பாபநாசம் என்ற தீர்த்தமானது அந்த ஸ்ரீக்ஷேத்திரத்தில் இருக்கின்றது. கீழ்பால் பாற்கரதீத்தமும் தெற்கில் பதும தீர்த்தமும் மேற்றிசையில் சங்கதீர்த்தமும் வடதிக்கில் சேஷதீர்த்தமும் இருக்கின்றன. இந்த க்ஷேத்திரத்தின் உத்தரதிசையில் கங்காநதியின் அம்சத்தில் உற்பத்தியான அர்ச்சுனநதி பிரவகித்து

இந்த க்ஷேத்திரத்தைப் பரிசுத்தமாக்குகின்றது. ஆதி வடவிருக்ஷத்தின் அம்சமாகிய தங்காலபர்வதமிருக்கின்றது. ஸ்ரீமந்நாராயணன் அவ்விடத்தில் ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி சம்மதராய் ஆங்கெழுந்தருளியிருக்கின்றார். கிருதயுகத்தில் பள்ளிகொண்டும், திரேதாயுகத்தில் வீற்றிருந்தும், துவாபரயுகத்தில் நின்ற திருக்கோலமாயும் சேவை சாதிக்கின்றார் பகவான்என்றுரைத்த நாரதரைப்பார்த்துப்புரூரவசக்கரவர்த்தி, சுவாமி நாரதரே! அந்தக் க்ஷேத்திரத்திற்கு யாது காரணத்தால் ஸ்ரீக்ஷேத்திரமென்று பெயரெய்தியது? இந்தவிவரமும் பஞ்சதீர்த்தங்கள் தங்கால பருவதம் ஆகியவற்றின் மகிமையும் அந்த க்ஷேத்திரத்தில் பகவான்மூன்று திருக்கோலங்களுடன் வீற்றிருக்கும் காரணமும் கூறியருளவேண்டும் என்றான். நாரதமகாரிஷி கூறுகின்றார்.

பூர்வத்தில் எம்பெருமான் திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்தருளும்போது ஒருகாலத்தில் ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவியாகிய இவர்களின் சகிகளுக்குள் விவாதமுண்டாயிற்று. அப்போது ஸ்ரீதேவியின் பரிசாரிகைகள் சொல்லுகின்றனர். ஸ்ரீதேவியானவள் விஷ்ணு பத்தினியும் ஜகதீசுவரியும் ஜகங்களனைத்திற்கும் மாதாவும், சகலமானமங்களங்களுக்கும் அதிதேவதையும், ஜகத்துக்கு ஆதார பூதையும், விஷ்ணுவுக்குப் பிரியநாயகியுமானவள். ஸ்ரீதேவியின் சேர்க்கையினாலேயே பகவான், ஸ்ரீசனென்றும், ஸ்ரீநிகேதனன் என்றும், ஸ்ரீநிதியென்றும், ஸ்ரீதனனென்றும், ஸ்ரீநிவாசனென்றும் திவ்வியநாமங்களைப் பெற்றிருக்கின்றார். பிரமன், ருத்திரன், இந்திரன் முதலியோரடைந்துள்ள உன்னதபதவியும் அந்த ஸ்ரீதேவியின் கடாக்ஷத்தினாலேயே. வேதங்கள் ஸ்ரீதேவியை அகில ஜகத்துக்கும் நாயகியென்றும் விஷ்ணுபத்தினியென்றும் சுவர்ணவர்ணமுள்ளவளென்றும் ஹரிணியென்றும் பொன் வெள்ளியாலான மாலையுடையாள் என்றும் சந்திரையென்றும் விஷ்ணுவையெப்போதும் பின் பற்றிச்செல்பவளென்றும் கூறுகின்றனவென்று முடித்தனர். உடனே பூதேவியின் தோழிகள் கூறத்தொடங்கினர். பூமிதான் ஜகத்துக்கு ஆதாரமானவள். உலகனைத்தும் பொறுப்பவள். விஷ்ணுவுக்குப் பிரிய பத்தினியும் பூதேவியே. ஆதியில் சிருஷ்டிக்கப் பட்டவளும் பூமியே. பூமியினின்றே நெல்முதலிய

தானியங்க ளுண்டாகின்றன. தானியங்களிலிருந்து அன்னமுண்டாகின்றது. அன்னத்தினால் ஜீவகோடிகள் ஜீவிக்கின்றன. ஆதலால் ஜீவன்களுக்கும் ஆதார பூதையான பூமிதேவியே முதன்மையானவள். ஸ்ரீபகவான் வாமனவதாரம் செய்து பாதசாரியாய்ச் சென்று மகாபலி சக்கிரவர்த்தியினிடம் யாசித்து வாங்கியதும் இந்தப் பூமியையே யன்றோ? திரிவிக்கிரமாவதாரம் செய்து தன் திருவடியினாலே இந்தப் பூமிதேவியைத் தான் அளந்தார். பிரளய காலத்திலும் பகவான் ஆயிரம் படங்களுடைய அநந்த ரூபங்கொண்டு இந்தப் பூமியைத் தான் சிரஸினால் தரிக்கின்றார். வேதங்கள் பூமியை நோக்கி லோகதாரிணியே நின்னையே வராக ரூபியான பகவான் உத்தாரணம் பண்ணினார். விஷ்ணுவின் திருமுடியால் தரிக்கப்பட்டவளே என்னை யடிக்கடி ரக்ஷிக்க வேண்டும். லக்ஷ்மீ தேவிக்கும் அத்தியந்தப் பிரியமானவளே என்று ஸ்தோத்திரம் செய்கின்றபடியால் விஷ்ணு பத்தினிகளுக்குள் சிறந்தவளும் சகலமான தேவர்களாலும் புகழப்பட்டவளும் பூமிதேவியேயென்று பூமிதேவியின் சகிகள் சொல்லி முடித்தனர். அப்பால் நீளாதேவியின் சகிகள் நீளாதேவியைப் புகழத் தொடங்கினர். நீளாதேவியே சகல ரஸரூபமாயிருப்பவள். விஷ்ணுவுக்கு அதிகப்பிரிய நாயகியானவள். சகலஜீவன்களுக்கும் ஆதார பூதையானவள். ஜல ரூபமானவளும் ஜலங்க ளுக்கு அதிதேவதையும் அவளே. ஜலமே சகலருக்கும் ஜீவதாரமானது. சராசர வஸ்துக்களனைத்தும் ஜலத்தினாலேயே ஜீவிக்கின்றன. புராண புருஷனால் ஜகங்களின் சிருஷ்டித் தொழில் நியமிக்கப்பட்டவளும் நீளாதேவியே. சகல தேவதா ஸ்வரூபமாயிருப்பதுவும் அப்புவே. அப்புவுக்கு நாரம் என்று பெயர். அந்தநாரத்தை 'அயனம்' அதாவது வழியாகவுடையவன் நாராயணன். அப்புவினின்றும் இவ்வுலகெலாம் ஆகியது என்றன போன்ற வேதவாக்கியங்களால் நீளாதேவியே யாவரினும் உயர்ந்தவள் என்று நீளாதேவியின் தோழிமார் கூறினர். இதையெல்லாம் கேள்வியுற்ற ஸ்ரீதேவியானவள் யானே பகவானுக்குப் பக்கத்தில் வீற்றிருக்கவும், அவருடைய சயனத்தில் யான் மாத்திரம் இருந்து பொது நீக்கி யவரை யனுபவிப்பதற்கும் தக்க தவமிபற்றுகின்றேன் என்று தங்கால வரை வந்து சேர்ந்தனள். அப்போதந்த மலைப்பிரதேச முற்றிலும் அந்த

ஸ்ரீதேவியின் தேககாந்தியால் பிரகாசித்தது. சைத்திய சௌரப்பிய மாந்தியம் உள்ள இளங்காற்று வீசியது. அக்கினி பகவான் புகையின்றி வலம்கொண்டெழும்பி ஜ்வலித்தார். வண்டுகள், கிளிகள், குயில்கள் மனோகரமாய்ப் பாடின. தளிர்க்காத மரங்கள் தளிர்த்தன. புஷ்பிக்காத மரங்கள் பூத்தன. பழுக்காத மரஞ் செடி கொடிகள் பரிபக்குவமான பழங்களை யேற்றன. ஞானவான்களாயும் சிலவான்களாயுமுள்ள மகரிஷிகளுக்கு முன் லக்ஷ்மிதேவியாவிர்ப்பவித்தாள். கோடி பால சூரியர்களைப் போன்ற தேக காந்தியுள்ளவளும் ஸ்வர்ணமயமான தாமரை மலரில் வீற்றிருப்பவளும் சகலமான உத்தம சாமுத்திரிக லக்ஷணங்களுடன் கூடியவளும் தாமரையிதழ்போன்ற விசாலமான நேத்திரங்களை யுடையவளுமாய்ப் பிரகாசித்தாள். அவள் கூந்தல் நீலமேகம் போல் பிரகாசித்தது. அவள் திருமேனியில் திவ்வியமான சந்தனமும் புஷ்ப ஹாரங்களும் பரிமளித்தன. நவரத்தின கசிதமான திருவாபரணங்க ளொளிவீசின. மின்னல் போன்ற நுண்ணிய இடையும் பருத்த கடிதடமும் பயோதரங்களும் பிரகாசித்தன. அபய ஹஸ்தமும் வரத ஹஸ்தமும் கனகாம்புஜங்களைத் தரித்த திருக்கரங்க ளிரண்டுமாகச் சதுர்ப் புஜங்கள் விளங்கின. இரு பக்கங்களிலும் இரண்டு வெள்ளை யானைகள் தந்துதிக்கையிற்றாங்கிய கனககலசங்களிலுள்ள நறும்புனலால் மஞ்சனமாட்டிக் கொண்டிருந்தன. இவ்வாறு தரிசன மளித்த லக்ஷ்மீதேவியைக் கண்ணுற்றவ் விடத்திய முனிவர் ஆனந்த சாகரத்தில் மூழ்கி யவ்வன்னையின் றிருவடிகளில் பன்முறை வீழ்ந்தெழுந்து "தொழுந் தோறும் தொழுந் தோறும் களிதுளங்குவார்" ஆகியவளை வேதவாக்கியங்களால் பலவாறாகப் புகழ்ந்தனர்.

இஃது பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் ஸ்ரீ க்ஷேத்திர மகத்துவத்தில் லக்ஷ்மீதேவி ஸ்ரீக்ஷேத்திரத்தில் ஆவிர்ப்பவித்தல் என்ற இரண்டாவதத்தியாயம்.

ஸ்ரீலக்ஷ்மீநாராயணாய நம:

# மூன்றாவது அத்தியாயம்.

---

மெய்யடி யவர்க்குநாற் பயனு மிக்கருள்
பையரா வணையவன் பாதம் போற்றியே
செய்பவ ளிருந்தவம் செய்ய வைம்படைக்
கையனுங் கெழுந்தருள் கதை யியம்புவாம்.

இவ்வாறு தங்காலவரையி லெழுந்தருளிச் சேவையளித்த அரவிந்த மந்திரையாகிய இந்திரையை யிருடிகள் துதிக்கப் புக்கனர்.

கமல மலரில் வசிப்பவளே, கமலம் போன்ற திருக் கண்கள் உடையவளே, கமலமே ஆசனமா யுடையாளே, கமலை யென்ற திருநாமம் பெற்றவளே, பதும மலரில் உதித்தவளே, பதும மாலை யணிந்தவளே, பதுமங்களைத் திருக் கரங்களில் தரிப்பவளே, உலகனைத் திற்கும் தலைவியே, உலகத்திற்கு ஹித முண்டு பண்ணுபவளே, உலகனைத்து மீன்றவளே, ஸ்ரீ ரூபமும் பூமி ரூபமும் நிளா ரூபமும் உடையவளே, சத்திய ஸ்வரூபியே, நித்தியையும் நிர்விகாரையுமானவளே, கற்பதரு சந்திரன் ஆகியவர்க்குச் சகோதரியே, சர்வாபீஷ்டங்களையுந் தருபவளே, கௌரி, ஸரஸ்வதி ஸாவித்திரி காயத்திரி இந்திராணி இவர்களின் ரூப முடையவளே, கருணாபூரிதங்களான கடைக் கண்களும் மிருதுவான திருவாக்கும் உள்ளவளே, மங்களகரமானவளே, மங்கள ஸ்வரூபமுள்ளவளே, பரிசுத்தமான மானஸமும் பரிசுத்தமான திருவாக்கும் பரிசுத்தமான கிரியைகளு முடையாளே, பரமாத்துமாவுக்கு அந்தரங்கமான பிரிய நாயகியே, அமிர்தத்தி லுற்பத்தி யானவளே, அமிர்த மயமான வசனமும் அமிர்த மயமான பார்வையு முள்ளவளே, சகல லோகங்களும் சரணம் புகத் தக்கவளே, சகல லோகங்களின் இடுக்கண் ஒழிப்பவளே! நினக் கனேகம் வந்தனம். எங்களைக் காத்தருள் புரிவாயாக. எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனா யிருக்குங்கால் லக்ஷ்மிதேவியாயும், பிரமா வாகுங்கால் சரஸ்வதிதேவியாகியும், சங்கரனாகும்போது சங்கரியாயும், இந்திரனாம்போழ்து இந்திராணியாகியும், அக்கினிபகவானாகும் சமயம் ஜோதி ரூபமாகிய சுவாகாதேவியாயும், இயமனாம்போது

சம்யமனீ தேவியாகியும், நிருதி யாகும்போது தமவீதேவியாயும், வருணனாகும் காலத்தில் பார்க்கவீ தேவியாகியும், வாயுபகவானும் தருணம் சதாகதிதேவியாயும், வைச்சிரவணனாம்போது விபூதிதேவியாயும், உருத்திரனாகும்போது உருத்திராணியாகியும், இராமாவதாரத்தில் அயோனிஜையான சீதாதேவியாகியும், கண்ணனாகுங் காலத்து உருக்குமணியாயும் இவ்வாறு பகவானுடைய அனந்தாவதாரங்களில் அவ்வவ்வவதாராநுகுணமுள்ள பத்நினியாய்த் திருவவதரித்து எம்பெருமானைக் கணமும் இடைபிரியாதவளே! நும் பீருவரின் மகிமையை மனத்தினால் நினைக்கவாவது, வாக்கினாற் றுதிக்கவாவது யாவரால் முடியும்? அபரிமிதமான நும் மகத்துவம் எத்தனை கோடி யுகங்கள் கேட்பினும் முடிவு பெறுமா! பிரமருத்திரேந்திராதி தேவதைகளும் அனந்தங்களான வேதங்களும் நும் பெருமையை வர்ணிக்கத் தொடங்கி அதில் கோடியிலொருபாகமும் றுதிக்க வியலாது களைத்திருப்பதுங்களைத்திற்கும் தெரிந்ததே. வேதங்களால் ஒருவாறாகப் பிரதிபாதிக்கப் பட்ட உன்னைச் சரண் புக்கனம் யாம் என்று கூறிய முனிவரர்களை நோக்கித் திருமங்கையானவள் அருள்சுரந்து புன்முறுவலுடன் புகல்கின்றாள். உங்களுடைய பக்திக்கு மகிழ்வெய்தினேன். உங்கட்கு வேண்டிய வரங்களை யருள்கின்றேன் என்றனள். அன்னையே நின்னையாங் கண்டதும் எங்கள் தவமும் பலித்தது. எங்கள் ஜென்மமும் பயன் பெற்றது. ஆயினும் ஓர் வரம் வேண்டுகின்றேம். நீ யிண்டே எப்போதும் எழுந்தருளி யிருக்க வேண்டும். நீ இங்கு வசிப்பதால் பகவானிவ்விடத்தில் பிரசன்னமாகி யிவ்விடத்திலேயே நித்திய வாசம் செய்வர் என்ற ரிஷிகளைப் பார்த்து உங்கள் அபீஷ்டப் பிரகாரம் இவ்விடத்திலேயே வாசம் செய்குவல். நீங்க ளிசைத்த என் ஸ்தோத்திரத்தை யாவன் பக்தி சிரத்தையோடு பிரதி தினம் பாராயணம் செய்கின்றனோ அவன் எனது பரிபூரணமான கிருபைக்குப் பாத்திரனாகித் தீர்க்காயுசும், ஆரோக்கியமும், சகலைசுவரியமும், புத்திர சம்பத்தும் உள்ளவனாகி விஷ்ணு பத்தியுடையோனாய் விடுவன். என றுரைத்தருளிய விடத்திலேயே திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு பகவானை நோக்கியரிய தவம் புரிந்து கொண்டிருந்தனள். அவ்விலக்குமியின் பெருந் தவத்திற்கு உவந்து பகவான் பாம்பணைப்பள்ளி

விட்டு நீங்கித்திரு மாதுக்குப் பிரத்தியக்ஷமாகப் பிரயாணமாயினர். இந்திரனோடு பிரமன் ஈசனிமையவரெல்லாம் சூழ்ந்து துதித்து வரவும், பிருகு மார்க்கண்டேயர் முதலோராம் பல்லாயிரம் முனிவர்கள் தோத்திரிக்கவும் சனக சனந்தன சனற்குமாரர் முதலியவரும் அஷ்டதிக்குப் பாலகரும் "ஜயவிஜயீபவ" என்று வாழ்த்துக்கூறி வரவும், சங்கம், சக்கிரம், வாள், கதை, சார்ங்கம் ஆகிய பஞ்சாயுதங்களைத் தரித்து எழுந்தருளும்போது சூரியனும் சந்திரனும் இருமாறு நின்று சாமரையிரட்ட திசைகளெல்லாம் செவிடுபடும்படி தேவதுந்துபிகள் முழங்கப் பொன்மலைமேல் நீலவரை தோன்றியதுபோலே பெரிய திருவடி திருத்தோண்மீதேறியருளி பூதேவி நீளாதேவி சமேதராய் தங்காலவரைப்பாற் றவமியற்றும் ஸ்ரீதேவிமுன் பிரசன்னமாயினர். உடனே லக்ஷ்மிதேவியானவள் அதிக சம்பிரமத்துடனெழுந்து தன் பிராண நாதனுடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாகத் தண்டம் ஸமர்ப்பித்துநின்று கண்களினின் ஞானந்தபாஷ்பம் பொழியப் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தாள். கருணாமூர்த்தியும் கருணைக் கடலுமான பதுமநாபனே பக்தவத்ஸல, பக்தர்களுடைய இருதய கமலவாச, பக்தர்களுடைய துயர்களை நீக்கியவர்களை ரக்ஷிப்பவனே, கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, திரிவிக்கிரம, வாமன, ரிஷிகேச, பத்மநாப, தாமோதர, கருடத்தவஜ, நின்திருவடியை நமஸ்கரிக்கின்றேன். இப்படிப் பலவாருகப் புகழ்ந்து தேகம் ஆத்தியந்தம் புளகாங்கிதையாய் பக்தி பரவசையாய் நின்ற தன் பிரியமகிஷியாகிய ஸ்ரீதேவியை அதிகப்பிரேமையோடு முகத்தழுவித் தன் விசாலமான திருமார்புடன் சேர்த்தருளினர் பகவான். மாதர் திலகமே நின்றவத்திற்குமகிழ்ந்தேன். நின்னைப்போலிப்படி யருந்தவம் புரிந்தோ ரெவருமிலர். நினக்கு வேண்டும் வரங்களை வரிப்பாயாக. நீயே என் பூரண கடாக்ஷத்திற்குப் பாத்திரமானவள், என்பத்தினிகளனைவரினும் நீயே உயர்ந்தவள். உன்சேர்க்கையினலேயே யன்றோ யான் ஸ்ரீய:பதி என்று சகல லோகங்களாலும் புகழப்படுகின்றேன். பிரமன் உருத்திரன் இந்திரன் முதலியவரும் நின் கடாக்ஷத்தினலேயே யன்றோ தத்தமுயர் நிலையெய்தி யின்புறுகின்றார் என்ற பிராணநாயகனைப் பார்த்து லக்ஷ்மிதேவியானவள் சுவாமி! தேவரீருடைய தரிசனமே

எனக்கு சர்வ சிலாக்கியமானவரம். தேவரீர் திருவடிகளில் சலன மில்லாத பக்தியும் நின் திருநாமங்களை யுச்சரித்துப் பாராயணஞ் செய்வதிலிடையறாக அன்பும் எனக்கு நிலைபெறக்கடவன. தேவரீருடைய பரிபூரணகிருபை என்மீதிருக்கக் கடவது. யானியற்றிய தவம் பலனடைந்ததாய் இம்மலையின்கண் தேவரீர் நித்திய வாசஞ் செய்தருளவேண்டும். திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டருளியதுபோல இவ்விடத்தும் சேஷசயனத்தில் பள்ளிகொள்ள வேண்டுமென்று வேண்ட எம்பிரான் அவ்வாறே செய்கிறேனென்று வாக்களித்தனர். பின்னும் அவர் பெரிய பிராட்டியை நோக்கி, வாராய் வனிதையர் திலகமே! இந்த திவ்விய தேசமானது நின்பெயரால் ஸ்ரீக்ஷேத்திரம் என்று வழங்கக்கடவது. என்றுரைத்து அங்ஙனமே பள்ளிகொண்டருளினர். பூமிதேவி நீளாதேவியாகியவருக் லக்ஷ்மிதேவிக்கு வந்தனங்கூறி யவளைப் பலவாறுகப் புகழ்ந்து அவளிடம் அபராதக்ஷமை கேட்டனர். தங்களிருவரிலும் அரவணைச் செல்வனுக்கு உகந்தபத்தினி ஸ்ரீதேவியேயென்றும் அவளே பரமாத்துமஸ்வரூபியென்றும் சகல ஜீவகோடிகளுக்குச் சக்தியும் முமுக்ஷுக்களுக்கு முக்தியும் பக்திமான்களுக்குப் பக்தியும், சகல காரிய ஸித்தியும், சுருதி,ஸ்மிருதியும் அவளேயென்றும் அவளுடைய திருவருளினாலேயே தாமிருவரும் கிருதார்த்தைகள் என்றுங் கூறினர். அப்போது கமலாதேவியும் அவ்விருவரையும் அந்தரங்கப் பிரியத்தோடு ஆலிங்கனம் செய்துகொண்டு அவர்களுடன் அளவளாவி வீற்றிருந்தாள். ஸ்ரீ பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் ஸ்ரீக்ஷேத்திர மகத்துவத்தில் ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மிதேவிக்குப் பிரஸன்னமாகுகை என்ற மூன்றாவதத்தியாயம்.

# நாலாவது அத்தியாயம்.

தஞ்சமென் றோர்க்கெலாம் தருவைப் போன்றருள்
கஞ்சமா திலகுதங் கால வோங்கல்பால்
பஞ்சபா தகமனற் பஞ்ச தாக்குநீர்ப்
பஞ்சதீர்த் தங்களின் பண்பை யோதுவாம்.

புரூரவச் சக்கிரவர்த்தியானவர் நாரதரைப் பார்த்து ஸ்வாமி பிரமநந்தன ஸ்ரீக்ஷேத்திரத்திலுள்ள பஞ்ச தீர்த்தங்களின் மகிமையைக் கேட்டவுடனேயே யத்தீர்த்தங்களின் ஸ்நானபலன் எய்துகின்றதென்று புகன்றீரே அப்படிப்பட்ட தீர்த்தங்களின் மகத்துவத்தைக் கூறியருளவேண்டுமென்று பிரார்த்திய நிற்க நாரதர் கூறுகின்றார்.

கேளாய் விதுகுலதிலக! அந்தத் திவ்யக்ஷேத்திரத்திற்குக் கீழ்பாலுள்ள பாஸ்கரதீர்த்தம், தெற்கிலிருக்கும் பதும தீர்த்தம், மேற்கிலுள்ள சங்க தீர்த்தம், வடபாலுள்ளசேஷதீர்த்தம், மத்தியிலிலகும் பாபநாச தீர்த்தம், உத்தர திக்கில் பிரவகித்துக்கொண்டிருக்கும் அர்ச்சுன நதியாகியவற்றின் வரலாற்றைச் சொல்லுகின்றேன். பக்தி சிரத்தையோடு கேட்பாயாக.

முன்னொருகாலத்தில் காலவரிஷிக்குப் புத்திரராகிய சிந்துமாமுனிவர் சாளக்கிராம க்ஷேத்திரத்தில் பிதா மகனைக்குறித்து அரிய தவம்புரிந்தார். அந்தச் சதுர்முகப் பிரஸாதத்தினால் சிந்துமாமுனிக்குச் சுகிருதியென்றும் விகிருதியென்றும் இரண்டு புத்திரிகள் உண்டாயினர். அவ்விரண்டு கன்னிகாரத்தினங்களும் சுக்கில பக்ஷ சந்திரன்போல் வளர்ந்து சௌந்தரியத்திலும் குணங்களிலும் சிறந்து விளங்கினர். அப்பெண்மணிகளிருவரும் மாதா பிதாக்களுக்கும் அத்தபோவனத்தில் வசிக்கும் ரிஷிகள் ரிஷி பத்நினிகள் முதலியயாவர்க்கும் மிக விநயத்தோடும் பக்தியோடும் நடந்துவந்ததால் யாவராலும் கொண்டாடப்பட்டார்கள்.

அக்கன்னியர்க்கு வயது பன்னிரண்டாகியும் மாதாபிதாக்கள் தக்கவரைப் பார்த்தளித்திலர். ஓர் நாள் பிதா புதல்வியரை நோக்கிக்

கண்மணிகாள்! நுங்கட்கிஷ்டமாய்ந்தவரர்களை நீங்களே தேர்ந்துகொள்க வென்றதும், சுகிர்தியானவள் ஜகத்சாக்ஷியான சூரிய பகவானைப் பர்த்தாவாக வரித்தாள். விகிர்தியானவள் சுசர்மாவென்னும் விப்பிரனை வரித்தாள். அவர்களபீஷ்டப்படியே சிந்து முனிவர் சுகிருதியைப் பாற்கரனுக்குக் கன்னிகாதானம் செய்து சுசர்மாவை யழைத்து அவற்கு விகிர்தியை விவாகம் செய்து கொடுத்தார். சுகிர்தியானவள் தன் பர்த்தாவை யடைவதற்காகக் கொடிய தவமியற்றத் தொடங்கினாள். மழைகாலத்திலும் பனிகாலத்திலும் நீரிடை நின்றும் கோடைகாலத்தில் அக்கினி மத்தியிலிருந்தும் பலாசனம், பர்ணாசனம், ஜலாசனம், வாதாசனம், நிரசனமுடையவளாய்த் தன் ஹிருதயத்தைத் தன் பிராணகாந்தனாகிய பகலவன்பால் நிறுவித் தவம் புரிந்துகொண்டிருந்தாள். அப்போது சண்டகோஷன் என்னும் ஓர் அரக்கன் அவளைக் கவர்ந்து சென்றான். அவள் பயந்து நடுங்கிக் கதிரவனைநோக்கி பிராண நாயகா ஜகத்ரக்ஷகா! அடியேனைக் காத்தருளவேண்டும் நீகாவாவிடின் என்னைக் காப்பாரார்? நான் பாம்பின் வாய்த் தேரை போற் பரிதபிக்கிறேனே, என்மீதுன் சித்தமின்னுமிரங்கவில்லையா. நான் படும்பாட்டைக் கண்டால் கல்லும் கரையுமே. பேயும் இரங்குமே. நீ கருணை கூராததற்குக் காரணம் யாதோ? நீ என்னைக் காவாவிடில் லோகபாந்தவன் என்ற பெயர் சிதைந்துவிடாதோ? நின்னை நோக்கி யான் புரிந்த தவம் இவ்வாறு முடிவுறுவது? என்று பலவாறாகப் பிரலாபிக்கும் சுகிர்திக்கிரங்கிப் பதுமினி நாயகன் தயைபுரிந்து தன் சண்டசக்திகளில் ஒன்றை யேவினன். உடனே அச்சக்தியானது மூவுலகையும் சாம்பராக்குவது போல் மகா உக்கிராவேசத்துடனசுரனை யணுகவே யவன் சுகிர்தியைவிட்டு அவண் தவம் புரிந்து கொண்டிருந்த வேதியன்பாலொதுங்க வச்சத்தியானது அசுரனுடன் சேர்த்து வேதியனையும் நீறாக்கியது. அதுமுதல் பகலவற்குப் பிரமகத்தி தோஷம் தொடர்ந்து பகுப்பிரகாரமாகப் பிடித்தது. ஸ்ரீக்ஷேத்திரத்திற்குச் சூரியபகவான் அணுகவும் அவ்விடத்திலுள்ள தீர்த்தத்தின் மகிமையால் பிரமஹத்தியினின்று வீடுபெற்றான். அதுமுதல் அந்தத்தீர்த்தத்திற்கு பாற்கர தீர்த்தமென்று பெயரெய்தியது. அந்தத்தீர்த்தத்தின் மகிமையை யாவர் கேட்டாலும் அதை யாவர் தரிசனம் செய்

யினும் அவர் சகல மகாபாதகங்களினின்றும் விடுபட்டு இம்மையி லடைய வேண்டிய போகபோக்கியங்களையு மநுபவித்து முடிவில் சாசுவதமான பதவி அடைவர். தென்றிசையிலுள்ள பதும தீர்த்த மும் மேற்கிலுள்ள சங்க தீர்த்தமும் குபேரனிடத்துள்ள பதுமநிதி சங்கநிதியாகியவற்றின் அம்சங்களினின்றுண்டாயின. அந்தத் தீர் த்தத்துவயமும் தம்மைத்தியானிப்பவர்க்கும் கண்ணுறுவோர்க்கும் நீராடுவோர்க்கும் நவநிதிகளையுமளித்துக் குபேர சம்பத்துண்டாக் கும் அந்தப் புண்ணிய மலையின் வடபாகத்தில் ஓர் பிலத்துவார மிருக்கிறது. அதின்வழியாக பன்னகவரசனுகிய ஆதிசேஷன் பாதலத்தினின்று பூதலத்திற்கு வந்து அவ்விடத்திலுள்ள தீர்த் தத்தில் ஸ்நானம் செய்து அவ்வரையில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி சமேதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபதியை வழிபட்டு வந்தான். இஙஙனம் நிகழுங் காலத்தில் ஒருநாள் பகவான் ஆதி சேஷனை நோக்கிச் சேஷாய் பணியரசே! இப்பூவுலகில் கலி புருஷன் பிரவேசித்திருக்கிறான். சாதுக்களுக்கும் சத்கர்மானுஷ்டானத்துக் கும் ஏற்றகால மில்லை, துராசாரத்திற்கும் துஷ்டர்களுக்கும் இசை ந்த காலமிது. ஆதலால் நீ இனிமேல் என்னை யர்ச்சிப்பதற்காக இப்பூவுலகிற்கு வருதல்தகாது. இதுமுதல் என்னை நின்னுலகின் கண்ணே யே வணங்குவாயாக என்றனர். நாகேந்திரனு மவ்வாறே யியற்றினன். அந்த அனந்தன் வந்து நீராடின தீர்த்தம் தான் சேஷதீர்த்தம் எனப்படுகிறது. அதில் ஸ்நானம் செய்வோர் ஆதி சேஷனைப்போல் ஞானத்திலும், கல்வியிலும் சிறந்தவர்களாய் பக வத் பத்தியிலும் அப்பணிபதிக்குச் சமானர்களாய் அவ்வனந்தாழ் வானைப் போல பகவத்கைங்கரியபரர்களில் முதல்வராக எண்ணப் படுவர். பஞ்ச தீர்த்தங்களுக்கும் நாயக பூதமாயிலகும் பாபநாசத் தின் மகிமையையும் கூறுகின்றேன் என்று நாரதர் கூறுகின்றார்.

முன்னொருநாள் கங்கை, காவேரி, காளிந்தி, சரஸ்வதி, இரே வை, வேத்திரவதி, தாமிரை, துங்கபத்திரை, கௌதமி, கிருஷ்ணை, வேணு, விபாகை, சக்கிரா, தமாலா, பயஸ்வினி, சோணை, ஸிந்து சரயு, தமஸா, கோதாவரி, வேகவதி, போகவதி, பூர்ணசந்திரிகா, நர்மதா, சந்திரபாகா, கண்டகி, கௌசிகி, சதத்துரு, அமிர்தா,

வேணி, புண்ணியா, ஸரஸா, திரிவிதாக்கிரமா, ரிஷிகுல்யா, தூத பாபா, கோமதி, குமாரா, சுகிர்தா, சிகி, அதீத்தப்ரா, சிவா, சந்திரா, விபாபா, விமோசனி, அளகா, கௌரி, மகா, லஜ்ஜா, வித்யுதம்பா, குமுத்வதி, பவித்திரா, ஸய்மதா, ராத்திரி, புண்டரீகா, மனோஜவா, கிபாதி, திரகூஷா தேனுகா, வேணுகா, சுகுமாரீ, நிவிர்த்தி, நளினீ இந்த நதிகளும் இன்னும் பல்லாயிரம் நதிகளும் புண்ணிய புஷ்கரணிகளும் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு ஸேவிப்பதற்காகத் திருப்பாற்கடல் நோக்கிச் சென்று கொண்டிருந்தன. மார்க்க மத்தியில் சப்த ரிஷிகளாந்நதிகளைக் கண்ணுற்றுப்புண்ணிய நதிகளே! நீங்கள் எவ்விடத்திற்குச் செல்கின்றீரென வினவ அந்நதிகள் மக ரிஷிகளைப் பார்த்து யாங்கள் க்ஷீராப்தியில் பாம்பணையிற் பள்ளி கொண்டு யோக நித்திரை செய்தருளும் ஸ்ரீமந்நாராயணனைக் காணப்போகின்றோம் என்றன. அப்போது சப்த ரிஷிகள் நதிகளைப் பார்த்துப் புண்ணிய ஸரித்துக்களே! எம்பெருமான் தென்றிசையில் பாண்டிநாட்டிலுள்ள ஸ்ரீக்ஷேத்திரம் என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்றார். ஆதலின் நீங்கள் அவ்விடத்திற்குச் சென்றால் பகவானை ஸ்ரீபூ நீளாசமேதராகத் தரிசனம் செய்து கொள்ளலாம் என்றலும் நதிகள் ஸ்ரீக்ஷேத்திரம்வந்து சேர்ந்தன. அவ்விடத்தில் சேஷதல்பத்தில் பள்ளிகொண்டிருக்கும் பரமபுருஷனை நதிகளனைத்தும் பலவாறாகப்புகழ்ந்தன. ஸ்ரீயப்பதியே, சங்கசக்கிரதரா, புருஷோத்தமா, தயாநிதியே, எங்கண்மீது கருணைகூர்ந்து எங்களைக்காப்பாய் ஐயனே என்று பிரார்த்தித்தன. அப்போது பகவான் பெருமகிழ் வெய்தி மந்தஹாசத்தோடு நதிகளைப் பார்த்துத்திருவாய் மலர்ந்தருளினார். வாரீர் புண்ணிய நதிகளே! நீங்களியாவரும் க்ஷேமமாயிருக்கின்றீர்களா? நீங்களிவணெய்திய காரணம்யாது எனவினவினர். அப்போது புண்ணியநதிகள் எம்பெருமானைப்பார்த்து சுவாமி பக்தவத்ஸல! தேவரீர் திருவுதரத்திற் குள்ளிருக்கும் அடியேங்களுக்கு க்ஷேமமே. ஆயினும் யாங்கள் இவ்விடத்திற்கு வந்தகாரணம் விண்ணப்பம்செய்து கொள்ளுகின்றோம். கருவினிற் குழவியைச்சிதைத்தோன், குருஹத்தி, மாதுருஹத்தி, பிதுருஹத்தி, மித்திரஹத்தி, வீரஹத்தி, ஸ்திரீஹத்தி, புரிந்தவன், செய்ந்நன்றிகொன்றோன், குருபத்தினியைப் புணர்ந்தோன்,

பாபகோஷ்டிப் பிரியன், மதுபானம் செய்வோன், மாம்சத்தைவிற்போன், தவம்விற்போன், ஸ்நானத்தைவிற்போன், தருமத்தைவிற்போன், ஆத்துமவிக்கிரயம் செய்வோன், பிராமணனையாவது, கன்னிகையையாவது, தாரத்தையாவது கிரயம் செய்பவன், ரசபேதம் செய்வோன், சோரன், வியபிசாரம் செய்வோன், அந்நியர்களுடைய க்ஷேத்திரத்தையாவது, திரவியத்தையாவது, தாரத்தையாவது அபகரிப்போன், தகாத்தொழில் செய்வோன், நீசவித்தையுடையான், இடம்பம் பண்ணுவோன், சூத்திரசகவாசப்பிரியன், சூத்திரபோசனப்பிரியன், சூத்திரயோனியிற் பற்றுடையோன், சூத்திரான்னம் புசிப்போன், அந்நியமங்கையரைக்கண்டு மகிழ்வோன், தன்குலாசாரம் கைவிட்டவன், மடாதிபத்தியம் செய்வோன், கிராமாதிகாரி, பொய்ச்சாக்ஷி கூறுவோன், புரோகிதன், வாபீகூபதடாகங்கள் ஆகியவற்றைக் கெடுத்தவன், தேவாலயம் சிதைத்தோன், தெய்வத்திற்கும் பிராமணருக்கும் கொடுத்ததையபகரிப்போன், அங்ஙனம் அபகரிப்பவர்க்கு உதவிபுரிவோன், அன்னதானம், பானதானம் இவற்றிற்கு இடையூறியற்றுவோன், தன்மனையாளைவிட்டுப் பிறன்மனை விரும்பும்பேதை, செல்லத்தகாவிடங்கட்குச் செல்வோன், ஆயுதபாணியாகிய பிராமணன், உலோபி, வேடன், தீயிடுவோன், நஞ்சூட்டுவோன், போரிற் பயந்தவன், வன்கண்ணன், தெய்வமிலதென்போன், அறமிகழ்வோன், விப்பிரநிந்தைபண்ணுவோன், ஜீவஹிம்சை செய்வோன், குலசீலம் குன்றினோன், யாகதூஷகன், தானதூஷகன், தபோதூஷகன், தீர்த்ததூஷகன், தேவதூஷகன், குருதூஷகன், ஆபத்திலிருப்போரையும், ஏழைகளையும், கதியற்றவரையும் பீடைசெய்வோன் ஆகியபாதகரும் இன்னும் எண்ணுதற்கரிய அகம்புரிந்தவரும் எம்பாவனசலங்களிற் படிந்து தம்பாதகங்களனைத்தையும் எம்பால் விடுத்துத் தூய்மையுற்றுச் செல்கின்றனர். அவ்வாறெம்பாலணுகியுள்ள கோரபாபங்களினின்று வீடுபெற வழியிதெனத்திருவாய் மலர்ந்தருளவேண்டும் பரம புருஷா எனப்புகன்றனர்.

நதிகளினுரையைச் செவியேற்றுப் பக்தவற்சலன் என்னடியார் மிகத்துயர். அவர் திருவடிகளைத் தரிசித்தலால் நீங்கள் பாபவிமோசனமடைவீர்கள். என் பக்தர் என் திருவடிப்பற்றுள்ளராத

லால், அவர் சரணங்களின் துகள் தூயனவேயாம். அத்தூளி தீர்த்தங்களையும் தூயன வாக்கத்தக்கனவே. பிராமணபாததூளி அதிலும் வைஷ்ணவ பாததூளிமிகவும் பரிசுத்தமானது. அப்படியே கோபாததூளியும் திருத்துழவின் கீழ்மண்ணும் பரிசுத்த மானவையாம். எந்தப்பிரதேசத்தில் வைஷ்ணவ பாததூளி படிந்திருக்குமோ அவ்விடத்தில் சகல தீர்த்தங்களும் வாசம்செய்யும். யாவனுடைய முடியில் ஸ்ரீவைஷ்ணவபாததீர்த்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதோ அவனுடையமுடியில் கங்கைமுதலாம் புண்ணியதீர்த்தங்கள் தங்குகின்றன. என்னடியார் அடிப்புனலை யாவன் உட்கொள்ளுகின்றானோ அவன் சகலபாபங்களினின்றும் விடுபெறுகிறான். கொடும்பாதகர்க்கும் இதுவே சிறந்தகழுவாயாகும். அத்தகைய மகத்துவமுள்ள அடியார்களுடைய திருவடிகளின் சம்பந்தத்தால் நீங்களிருவரும் பரிகாரமடைந்துய்க. நீவிரிருவரும் என் சந்நிதி முன்னிலங்கும் தேவநிர்மிதமான பாபவிநாசன புஷ்கரிணியில் ஆண்டுதோறும் துலாமாதத்தில் இங்கணுகிச் சேவைபெறக் கடவீர் என்றனர். ஆகையால் பகவானுடைய நியமனப் பிரகாரம் பிரதிவத்ஸரம் துலாமாசத்தில் சகல புண்ணிய தீர்த்தங்களும் அந்தப் பாபநாச தீர்த்தத்தில் ஆவிர்ப்பவிக்கின்றன. அந்தத் தீர்த்தமானது தருமார்த்த காம மோட்சங்களைப் பயக்கவல்லது. அந்தத் தீர்த்தகட்டத்தில் யாவரேனும் தேவப்பிரீதியாக வாவது பிராமணப் பிரீதியாகவாவது எது சமர்ப்பித்தாலும் அதுஒன்று கோடியாகப் பலனளிக்கும். சகல தீர்த்தங்களிலும் பஹுகாலம் ஸ்நானம் செய்வதால் எய்தும்பலன் அந்தப் பாப விநாசத்தில் ஒருமுறை ஸ்நானம் செய்வதினாலேயே கிடைக்கிறது. இந்த க்ஷேத்திரத்தின் வடபாகத்தில் பிரவகிக்கும் அர்ச்சுன நதியின் மகிமையும் கூறுகின்றேன். முற்காலத்தில் பாண்டவர்கள் வனங்கடோறும் சஞ்சரித்துத் திருவணைத் தரிசனம்பண்ணியவ்வனம் வந்துற்றனர். அங்கோர் நாள் அர்ச்சுனன் சூரியோதய சமயத்தில் கங்காதேவியை ஸ்மரித்து வாருணாஸ்த்திரத்தினால் பூமியைப் பிளந்தான். அப்படிப் பிளவுற்ற விடத்தினின்று கங்கை யுற்பத்தியாய்வரவே பஞ்சபாண்டவரனைவரும் அந்நதியில் மூழ்கி மகிழ்வெய்தினர். அதுமுதல் அதற்கு அருச்சுன நதியென்ற பெயர் வழங்குகின்றது. மற்ற நதிகளில் மாகமாசம் முழுவதும் ஸ்நானம்

செய்த பலன் அந்த அர்ச்சுனநதி வெற்று நாளில் ஒருமுறை ஸ்நானம் செய்பவனுக்கு அளிக்கின்றது. இவ்வாறு புரூரவனுக்கு நாரதர் தீர்த்தமகத்துவம் கூறியருளினர்.

இஃது பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் ஸ்ரீ க்ஷேத்திரமகத்துவத்தில் தீர்த்த மகத்துவமுரைத்த நான்காவது அத்தியாயம்.

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஐந்தாவது அத்தியாயம்.

மங்காத வளத்தவளத் திவிலடற் படவரவ மன்னனோடு
சிங்கார வடவிடவி வாதியற்றித் தாழ்ந்துபின்னர்ச் செய்தவத்தால்
சங்காழிக் கரனிருக்க நிற்கவிரு கண்வளரத் தான மான
தங்கால வரையெனச்சீ கேத்திரத்தி லார்ந்தவகை சாற்று வாமால்.

புரூரவசக்கிரவர்த்தியானவர் பேருவகையோடு யாழ்முனியை நோக்கி முனிநாயகா! பஞ்ச தீர்த்தங்களின் மகிமையைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளக் கேட்டுக்கிருதார்த்தனானேன். அந்த ஸ்ரீக்ஷேத்திரத்திலுள்ள புண்ணிய சைலத்தின் மகத்துவத்தையும் அப்பருவதத்துக்குத் தங்கால வரையெனப்பெயரெய்திய வகையையும் விவரமாக விரித்துரைத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க நாரதர் கூறுகின்றார்.

முன்னொருகாலத்தில் சுவேதத்துவீபத்தில் ஆயிரம் தாள்களுடன் நிற்கும் ஆதிவட விருக்ஷத்திற்கும் ஆயிரம் பணாமுடிகளுடனிலங்கும் ஆதிசேஷனுக்கும் ஒரு பெரிய விவாதம் உண்டாகியது. எம்பிராற்குச் சேஷபூதர்களாயுள்ள வவ்விருவர்க்கு முண்டான விவாதம் ஓர் வகையாய் முடிவடைவதற் கிடமில்லாததால் அவ்விருவரும் சத்திய லோகத்தில் கமலப்புத்தேள்பால் தீர்த்துக் கொள்ளப் போயினர். அவ்விடத்தில் ஆயிரமிதழ்களோடலர்ந்தபொற் கமலாசனத்தின் மேல் நான்கு சிரங்களும் நான் கிரட்டிக் கரங்களு மில

ங்க கோடி சூரியப் பிரகாசத்துடன் விளங்கும் திருமேனியும் பது மமாலே யணிதிருமார்பும் ஒளி வீச, சாவித்திரி காயத்திரிசரஸ்வதி யென்னும் தேவியர் புடை நெருங்க நான்கு வேதங்களும் வேதாங் கங்களும் பதினெண்புராணங்களும் இதிகாசங்களும் தெய்வவடிவு டன் தன்னைச் சூழ்ந்து நிற்ப இந்திரன் முதலிய திசைகாவலரும் மற்றுமுள்ளதேவரும் இறைஞ்சி யேத்தப் பல்லாயிரம் இருடி கள் பணிந்துபோற்றக் கின்னரர், கிம்புருடர் சித்தர் விஞ்சையர் முத லியோர் பலவகை வாத்தியங்களை வாசித்துச் செவிக்கினியகானம் செய்ய விற்றிருக்கு முந்தி வந்த வந்தனையைப் பார்த்து வடமரனும் பட் வரவும் தேவ தேவனே எந்தாய்! யாங்களிருவரும பூதமநா பற்குச் சேஷபூதரா யிருப்பதில் எங்களில் உயர்ந்தோன் இன்னானெ னப் பணித்தருள வேண்டு மென்றுரைக்க அம்போருகக்கடவுள் சொல்லலுற்றார்.

நீவிரிருவரும் எந்தைக்குச் சேஷபூதராயிருந்து அவர் திருவு ளம் உவப்பப்பணி செய்து வருவீர். உங்கட்கு மேற்பட்ட பக்தி சிரத்தையுடைய அடியார் வேறெவரும் இலர். ஆயினும் உம்மிரு வரில் அனந்தனே உயர்ந்தோன். எனெனில் "சென்றாற் குடையாம்" என்ற திருப்பாசுரத்திற் கூறியபடி அச்சுதன் அப்பணியரசின் மே ல் நிருக்கண் வளர்ந்தும் விற்றிருந்தும் நின்றருளியும் உவப்பர். ஆ திவடத்திலோ பள்ளி கொள்ளல் மட்டும் செய்துள்ளார். ஆதலால் ஆதிசேஷனே மிக்கோன். எனச்சததியலோகநாதன் உரைப்பக்கே ட்டு மிகத்துயருற்றவட விருக்கமும் பேரானந்தங் கொண்டவனந்த னும் பாற்கடற்கு மீண்டனர். அப்பால் ஆலமரம் ஆயிரமாண்டு திரு மணாளனை நோக்கித் தவம்புரிய இலக்குமி சமேதராய்க் கடல் வண் ணன் அவ்விடத்தின்முன்றோன்றினவுடன் அவ்விருக்கமானது புகல த்தொடங்கியது. கண்ணனே கமலக்கண்ணானே கமலையின்பதியே கருணைவாரிதியே கடவுளர் நாயகா கரிவரதாயகா, கவுத்துவாபரணா கஞ்சமென்சரணா, கார்நிறமெய்யா, கார்முகக்கையா, கிரியுருத்தரித் தாய், கிரியை முன்பரித்தாய், கீதமார் வேயா, கீர்த்திசேர் மாயா, குறளுருவெடுப்பாய்; குசலமே கொடுப்பாய்,கோசலை புத்திரா, கோ கனகநேத்திரா, சகல லோகபாலகரும் தேவரீரேயன்றோ? வேள்வி யைப் புசிப்பவரும் வேள்வியாயவரும் சோம சூரியாக்கினிகளும்

சத்தியமும் தருமமும் தேவரீரே. அடியேனைக் காத்தருள வேண்டு மென்று பிரார்த்தித்து வடவிருக்ஷத்தை நோக்கி ஸ்ரீமந் நாராயணன் முகமலர்ந்து அருள்சுரந்து மகாதபோ மகிமையுடன் கூடிய வடவிரு க்ஷமே! நினக்குயாது வரம்வேண்டும் என்றுகேட்க அந்தப்பாதவமா னது தயாநிதியே! தேவரீர் எவ்வாறு புயங்கராஜன்மீதுசயனித்தும் வீற்றிருந்தும் நின்றருளியும் கிருபை செய்திருக்கின்றீரோ அவ்வா றே என்னையும் அநுக்கிரகித்து என்னைச் சயனமாகவும் ஆசனமாக வும் நிற்கும் பாதபீடமாகவும் அங்கீகரிக்க வேண்டுமென கமலை கேள்வன் விருக்ஷேந்திரனே! நின்மனோரதம் நிறை வேற வேண்டுமாகில் நான்கு புருஷார்த்தங்களையும் தன் பாலணுகி னோர்க்குப் பயக்கவல்லதும் ஸ்ரீக்ஷேத்திரம் என்று திருநாமம் விள ங்குவதுமாகிய திவ்விய தேசத்தில் நீ சென்று பொருப்புருவுற்றிரு ப்பையேல் அவண்யான் வந்து ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளுடன் பள்ளிகொண்டும் வீற்றிருந்தும் நின்றருளியும் அருள் புரிகுவன். அவ்விடத்தில் அஷ்டாங்க யுக்தமான சோம சந்திர விமானமும் இலங்கும் என்றுரைத்துப் பகவான் அந்தர்த் தானமாயினர். பின் னர் அவ்வடவிருக்ஷம் அந்த ஸ்ரீக்ஷேத்திரத்தில் பருவத வடிவுடன் விளங்கி யிருக்குங் காலத்துப் பகவான் தன் திருவாக்கின்படியே அவ்வரையில் சயனித்தும் வீற்றிருந்தும் நின்றும் அருள் செய்து ள்ளார். ஆகையால் மதிகுலதிலகனும் மன்னர் மன்ன அம்மலையே நிற்குத் தவமியற்ற ஏற்றதானமாகும். தம்-அந்த வடவிருக்கத்தை, காலே-உத்தேசித்த சமயத்தில் வந்து பகவான் கிருபை பாலித்த தால் அம்மலைக்குத் தங்காலகிரி யென்று பெயரெய்தியது. இந் தத் தங்காலசைலத்தின் வரலாறு மிகவும் பாவனமானதும் சகல பாப விமோசனம் பண்ணக் கூடியதும், அரிய தவமியற்றும் பயனைப்ப யக்கவல்லதுமாம். ஆதலால் நீ அந்தப் புண்ணிய மலையின்பால் தவமி யற்றச் செல்லக் கடவாய் என்ற நாரதரைநோக்கிப் புரூரவ சக்கிரவர் த்தி ஸ்வாமி! யான் எம்மந்திரத்தை யனுசந்தானஞ்செய்து ஸ்ரீயப்பதியை யடையக்கூடுமோ அம்மந்திரத்தை யுபதேசித் தருளவேண்டுமென நாரதமகரிஷி அரசனைப் பார்த்து சகல மந்திரங்களுள்ளும் எந்தைதந்தையாம் அரவிந்தைநாதன் மந்தி ரங்களே சிறந்தன. அவற்றுள்ளும் நியாஸ பூர்வகமாயுள்ள அஷ்

டாக்ஷரமே மந்திர ராஜமெனப்படும். அம்மந்திரமானது ஓம் நம: நாராயணாய என்ற மூன்று பாகங்களடங்கியது. அவற்றுள் ஓம் என்ற பிரணவமானது அகார-உகார மகாரங்களாலாகி மும்மறைக ளின் தொகுதியா யிருப்பது. அகாரமானது சர்வசேஷி ஸ்ரீமந் நா ராயணனையும், உகாரமானது அப்பெருமாற்கு நித்தியானபாயினி யாயிருந்து சேதனனுடைய உஜ்ஜீவனத்துக்குப்புருஷகார பூதையா ன பெரிய பிராட்டியையும், மகாரமானது எம்பெருமானுக்குச் சே ஷபூதனான சேதனனையும், நம: இது சேதனனுக்குள்ள சேஷத்துவ த்தையும் அதாவது அடிமைத் தன்மையையும், பாரதந்திரியத்தை யும் அதாவது சுவாதீன மின்மையையும் கூறும். 'நாராயணாய' என் றது சேதனனுக்கெல்லாம் ஏகப்பிராப்பியனும் சுவாமித் துவாதிகலி யாண குணங்களையுடையோனு மாகிய எம்பெருமானைக்கூறும் இம் மந்திராத்திரமானது நினைத்தவை நினைத்தவாறளித்தலில் சிந்தாமணி யை நிகர்த்தும் உச்சரிக்குந்தோறும் தெவிட்டாவிருஞ்சுவையுதவி மூப்புச் சாக்காட்டைத் தவிர்த்தலால் அமிர்தம் போன்றும் மோக்ஷ ப்பிரதமாகையால் எம்பெருமானைப்போன்று மிலங்கும், இம்மந்திர த்தின் மகிமை யபரிமிதமாகையால் பரிமித ஞானமுடைய வெம் போலியாரால் அளவிடற் கெளிதன் றென்று புகன்ற யாழ்முனியு ரையைத் தலைமேற்கொண்டு அத்தங்காலவரைக்குச் சென்று புரூரவ சக்கிரவர்த்தி தவம் புரியலுற்றான்.

செல்லியலும் பொழின்மதுரை யாட்சி செய்த
தேவேந்த்ர வல்லபப்பேர்ப் பாண்ட்ய னோர்நாள்
பல்லியங்கள் முழங்கவனம் புக்குச்சூழ்ந்த
பரிசனங்க ளுடன் விலங்கு வேட்டஞ் செய்தோர்
வல்லியத்தைத் துரத்திவந்து தண்கா லூர்க்கு
வடபுறத்தில் விசிகத்தால் மாய்க்க வஃது
தொல்லியல்கந் தருவவுருப் பெற்று மாவின்
தூயவுல கார்சரிதம் சொல்வா மன்னே.

முன்னோர்காலத்தில் மதுரையம்பதியிற் செங்கோல் செலுத்தி வந்த தேவேந்திர வல்லபனென்னும் பாண்டியன் வேட்டையாடும் வேட்கை கொண்டான். வேட்டையாடுதலில் தேர்ந்தோராகிய புல

வீரர்கள், வில், வாள், வேல், தோமரம், வல்லயம், வளைதடி முதலிய ஆயுதங்களைத் தரித்து எக்களிப்புடனும் வீராட்டகாசத்துடனும் தன்னைச் சூழ்ந்துவர தோற்கருவி, தொளைக்கருவி, கஞ்சக்கருவி முதலிய வாத்தியங்களின் முழக்கம் கேட்ட வொற்றைவெண் மருப்பார் கைப்பொருப்பும், எண்டிசாமுகத்துமுகளிறதினமும், அம்பலத்தாடுவோன் பாலிருக்கும் ஓர் புலியும், மகாபலனூரும் மானும் மதிபிடைநிகழும் முயலும், காளியூரும் கலைகுரற் சிங்கமும் ஒழிய வெஞ்சிய வெஞ்சினக்கரியும் வேங்கைத் திரளும் மானினமும் முயற் கூட்டமும், கண்டீரவக் குழுவும் நெஞ்சம் பதைக்கக் கூரிய தந்தமும், பார்வையும் நுணணிய மோப்பமும் முள்ளனவும் வைரவனூரும் புரவி போன்றனவும் வரியுழுவையையும் வலிய வேனத்தையும் ஒன்றியாகவே நிறுத்திப் போராடக் கூடியனவுமாகிய வேட்டைநாய்கள் கழுத்திற் கட்டிய மணிகள் கலகலவென் றொலிக்கச் சங்கிலிகளிலும் கோல்களிலும் பிணித்துத் தங்களைக் கொண்டு செல் வேட்டைக் காரர்களுடைய கைகளினின்று விடுபடு சமயத்தை யாவலுடன் நோக்கி யீர்த்துச் செல்ல வலைகளையும் வேட்டையாடுவோர்க்கு ஆகார முதலிய வற்றையும் சுமந்து பல்லோருடன் வரத் தானும் உத்தம மான சுழிகளோடு கூடியதும் ஐவகைக் கதிகளை யுடையதும், வாயுவினை வேகத்தால் வென்றதும் உச்சைச்சிரவம் போன்ற நிமலமான உடலோடு கூடியதுமான வுத்தம துரகத்தின்மீது நவமணிகளழுத்திய பொன்மயமான சேணமமைத்து அதின் மேலேறிக் கலினம் கைக்கொண்டு அதிவேகமாகப் பரிசெலுத்திச் சென்று தன்னுடன் வந்த சகல பரிவாரங்களுடன் பல் காவதம் வரை நீண்டு மேக மண்டலம் வரை யுயர்ந்திலங்கும் சதுரவரைச் சாரல்வந்து சேர்ந்தான். அம்மலைப் பக்கத்தில் நானாவித விருக்ஷங்கள் ஓங்கி வளர்ந்து பரிதி மண்டலம்வரை யுயர்ந்து சகல விருதுக்களிலும் தளிர்த்துத் தழைத்தரும்பிப் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தேன்மழை பொழிந்து நின்றன. அரசனாணைப்படி யுடன் வந்தோரனைவரும் கொம்புகளூதியும் பறைகள் முழக்கியும் அவ்வரைச் சாரல்களிலும் முழைகளிலும் உறங்கும் சிங்கம், வேங்கை, கரடி, சிவிங்கி, பன்றிமுதலிய விலங்குகளை யெல்லாம் எழுப்பிவிடவே அவைகளெல்லாம் கோரசப்தங்களோடு வரும்போது வேட்டைக்காரர் குரூரமான தங்கள்

18029

படைகளால் விலங்குகளையெல்லாம் வெட்டியும் குத்தியும் பிளவுண்ட யானை மத்தகங்களினின்றும் ஓடிபட்டவராக மருப்புக்களினின்றும் தெறித்த முத்துக்களைப் பொறுக்கி விற்களில் வைத்துந் தெறித்தும் கவணில்வைத்துவீசியும் பலவகைப் பக்ஷிகளையும் கொன்றனர். உயிரோடு பிடித்துக்கொண்டுபோகவேண்டுமென்றெண்ணியிருந்த மான்களையும் சவரிகளையும் யானைகளையும் வலைகள்பரப்பியும், கொப்பங்களில் வீழ்வித்தும், வேறு பல்வகைத்தந்திரங்கள் செய்தும் பிடித்துக்கொண்டனர். வேட்டைக்காரர்களாற்றுரத்தப்பட்டுத் தூரமான காடுகளிலோடியலைந்த யான்கள் கெட்ட வுத்தர்கள்பாலிரந்துசென்று சென்றலுத்த கல்விமான்கள் போலேங்கின. வேட்டை முடிந்தவுடன் அவ்வரசன் அவ்விடத்துள்ள நறுஞ்சுனைகளிற்படிந்து களைப்பாற்றிக்கொண்டு அவ்வரையிலுள்ள சந்தானகரணி முதலிய அரியவோடதிகளைக்கண்டு வியந்தும் தவம்புரியும் முனிவர்களையும் ஆங்கு நிலைபெறும் சித்தர்களையும் தெய்வதங்களையும் தரிசித்தானந்தசாகரத்தின் மூழ்கியும் அற்றையிரவைக் கழித்தான். மறுநாள் வைகறைத்துயிலெழுந்து நோக்குழியோர் கொடும்புலியானது அவ்வரசன் கண்ணிற் புலப்படச் சரசராசனதாரியாய்த் தன் பரிசனங்களைவிட்டு மனத்தினுங் கடியமாவையூர்ந்து அவ்வேங்கையைப் பின்பற்றிச் சென்றனன். அவ்வல்லியமானது பல்வனங்கடந்து பூர்வஜன்ம புண்ணியபலத்தால் ஸ்ரீக்ஷேத்திரம் வந்துசேர்ந்ததும் அவ்வரசனை யெதிர்த்துப் பாயத் தொடங்கிற்று. உடனே வின்ஞணிற்பூட்டியிருந்த அம்பையரசனெய்யவே யப்புலி உடலம் பிளந்திறந்தது. அப்போததன் சரீரத்தினின்றும் ஓர்கந்தருவன் வெளிப்பட்டந்தரத்தினிற்க, மன்னன் மிகவே வியப்புற்று ஐய! நின் வரலாறியம்புகென்ன, அத்தேவன் புகலலுற்றனன். யான் சந்திரகேதுவென்னும் கந்தருவராஜன். ஓர்நாள் வானுலகில் யான்மிகவும் கோலாகலத்துடன் என்னமாத்தியர்முதலானோர் புடைசூழ மதுரகானங்கேட்டானந்தித்துக்கொண்டிருந்தேனாதலால் அங்கெறியே சுதன்மையென்னும் தேவசபையை நோக்கிச் சென்றவியாழபகவானைக்கண்டும் அகங்காரத்தினாற்றக்க வந்தனை வழிபாடுகளியற்றத் தவறியதால் தேவகுரு சினமெய்தி என்னை மண்ணுலகில் புலியாமாறு சபித்தனர். உடனே அசனியுண்ட பாதவமென்ன நடுங்கி யம்மகாத்துமாவின் திருத்தாள்க

ளில் வீழ்ந்து சுவாமி! சிறியேன் அறியாதியற்றிய பிழையைப்பொ. றுத்தருள்க. தேவரீர் சிற்றம் சகிக்கத்தக்க சக்தியுள்ளேனல்லேன். எனக்குச் சாபவிமோசன காலமும் வழியும் அருள்புரியவேண்டும் என வேண்டுமென்னைநோக்கிச் சுரகுரு கூறியருளினர். கேளாய்சங் கிரகேதுவே! துவாபரயுகத்தில் பாண்டிநாட்டரசனுன தேவேந்திர வல்லபனென்போன் வேட்டையாடவருவான். அவன் கையம்பினுல் நீ யிறந்து சாபவிமோசனமிடைவாய். என்று கூறினர். யானும் வியாக்கிர வுருவடைந்து கொடுந்தொழில் புரிந்து பல்லாயிரவருடம் கழித்தேன். இப்போதுன்தயவினுல் சாபத்தினின்று வீடுபெற்றே ன். ஆதலால் குருவைக்கண்டவுடனெழுந்து அடியற்றமரம்போல் வீழ்ந்து தண்டப்பிரணுமம் செய்யவேண்டும். குருவின் புத்திர னையும், பௌத்திரனையும், பிரபௌத்திரனையும், குருவம்சத்தவர்க ளையும், குருபத்னியையும், குருசகோதரர்களையும் அவ்வாறே வழி பட்டுவரல்வேண்டும். ஆசாரியன் பக்கல் சிஷ்யன் ஒருகாலும் எவ் விதத்தினும் பிரதிகூலமியற்றல் தகாது. தன்னுசாரியன், தன்னு சாரியற் காசாரியன், அவற்காசாரியன் இவர்களோவ்வொருவரையும் ஸ்ரீமந்நாராயணனுகப் பாவிக்கவேண்டும். உடல்பொருளுயிராகும் யாவையும் ஆசாரியனைச் சேர்ந்தவென்றே எண்ணவேண்டும். ஜபம் ஹோமம் முதலியவையெல்லாம் ஆசாரியனுக்கென்றே யியற்றக்கட வன். பொய் டம்பம் பரிகாசம் கால்நீட்டிப்பிருத்தல் படுத்திருத்தல் முதலிய செயல்கள் ஆசாரியன் சந்நிதியில் செய்தல் தவிர்க. ஒரு வன் நல்லகதியடைந்துய்வதற்கும் அதோகதியடைந் தழிவதற்கும் குருவின் அனுக்கிரகமும் நிக்கிரகமும் முறையே காரணமாகின்றன வென்பதற்கு யானே நிதர்சனுமாகின்றேன். குருமகிமையை விரித் துரைக்கும் நம்மிருவர் சம்பாஷணையை யாவர் சிரத்தையோடு படிக் கின்றனரோ கேட்கின்றனரோவவர் பாவத்தினின்று வீடுபெற்று வீடுபெறுகின்ருர்கள். என்னுல்விடுபட்ட இந்தப் புலியுடலானது இங்கு புலிப்பாறையென்றவோர் பாறையாய் விளங்கும். உன்னுற் சாபவிமோசன மடைந்துய்ந்தேன். நீ நீடூழிவாழ்ந் துலகத்தை மனு நீதிதவருதீ பரிபாலனம் செய்வாயாக. யான் செல்கின்றேன் என்று புகன்றவக் கந்தருவனுக்குத் தேவருலகினின்று விமானம் வந்தது. அதேசமயத்தில் வைகுண்டத்தினின்றும் விமானம் எய்தியது. சுவ

ர்க்கத்தினின்று விமானம் கொண்டுபோந்தோர் விஷ்ணுதூதரை நோக்கி இந்தச் சந்திரகேது எம்முலகைச் சேர்ந்த கந்தருவன். இவன் சாபத்தாற் புலியுருவுற்றிருந்தான். இப்பொழுது தன்னுருப்பெற்றனனாதலால் எம்முலகடைதற்பாலனே என்றனர். அவரைப்பார்த்து விஷ்ணுதூதர் நீவிர் கூறியதனைத்தும் உண்மையேயாயினும் இவன் சாப விமோசனமுற்ற இந்தப் பிரதேசமானது ஸ்ரீமந்நாராயணன் லக்ஷ்மி சமேதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீக்ஷேத்திரமாகையால் வைகுண்டத்தின் மகத்துவமுடையது. ஆதலால் இத்தலத்தில் நிர்யாணமுறுவோர் ஒப்புயர்வில்லதும் என்றும் அழியாததுமான பரமபதமே யடைவர் என்றுரைத்துச் சந்திரகேதுவை வைகுண்டத்திற்கழைத்துச்சென்றனர். அவ்வாறு சந்திரகேது உயர்பதவி யடைந்ததைக் கண்டு அப்பால் இராஜேந்திர வல்லப பாண்டியன் அன்றவ்விடத்திருந்து செங்கமலையையும் அக்கமலநாதனும் புருஷோத்தமனையும் அந்த ஸ்ரீக்ஷேத்திரத்தில் தொழுதும் பரமபுருஷனுடைய புண்ணிய கதாசிரவணம் செய்தும் இரவைக்கழித்து மறுநாள் தன்னகரம் புக்கனன்.

இஃது பிரமாண்டபுராணத்தில் க்ஷேத்திரகாண்டத்தில் ஸ்ரீக்ஷேத்திரமகத்துவத்தில் ஆதிவடம் தங்காலபருவதமாதல் சந்திரகேது சாபவிமோசனம் ஆகியவை யடங்கிய ஐந்தாவது அத்தியாயம்.

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஆறாவது அத்தியாயம்.

கண்ணன் மதலை மதலைதனைக் கனவி னிமைபெறக்கண்டு
வண்ணக் கமல முகைமுலையாள் வாணன் செல்வ மகளுடையவ்
வண்ண லநிருத் தனைக்கொணர்வித் தணைய வவனைச் சிறையிடுவன்
கண்ணன் வாண னுடன்வனசக் கண்ணன் பொருத கதையுரைப்பாம்.

முனிவரனைவரும் சூதபுராணிகரைநோக்கி பிரவரிஷிதிலகா! நம்பால் ஸ்ரீக்ஷேத்திரமகத்துவமும் பஞ்சதீர்த்தங்களின் மகிமையும் புண்ணிய சைலமாகிய தங்காலவரையின் பெருமையும் கேட்டனம். எம்பெருமான் புரூரவசக்கிரவர்த்திக்கு அருள்புரிந்த சரித்திரம் உரைத்தருளவேண்டுமெனவேண்ட சூதபுராணிகர் கூறலாயினர்.

மகான்களே! கேண்மின். துவாபரயுகத்தில் பலிச்சக்கிரவர்த்திக்குப்புதல்வனாக மகாபலபராக்கிரசாலியும் ஈரைஞ்ஞூறு கரங்களுடையானுமாகியவாணனென்னுமசுரனுண்டாயினன். அவ்வரக்கன்முக்கட்கடவுளைநோக்கிக் கோரமான தவம்புரிந்து வேண்டும் வரங்களெல்லாம் பெற்றுப் பிரதாபத்தினுற்றபனனைவென்றவனாகி யுலகனைத்தும் தன்வசப்படுத்தி யரசாளத்தொடங்கினன். அவற்குக்கும்பாதனனென்றும் கும்பகன்னனென்றும் அமைச்சரிருவரிருந்தனர். மகாபுத்திமான்களாகிய மந்திரிகளிருவரின் மந்திரபலத்தாலும் தன் வரபலத்தால் சாக்ஷாத் பரமசிவனே பிரமதகணங்களுடன் வந்து தன்னகரத்தின் கோட்டைப்புறத்துக்காவல் காக்குமாறு வைத்திருந்தமையப்பினும் தனக்கொப்பாரும் தன்னின் மிக்காருமிலரென விறுமாப்புற்றிருந்தான். அவ்வாணனுக்கு உஷையென்னும் ஓர் புத்திரியிருந்தாள். வண்டுகளையும் கருமணலையும் வென்ற கூந்தலும் பூரணசந்திரனுக்குச் சமானமான முகமும் குவளைகளையும் தாமரைமலர்களையும் போன்று செவ்வரிபடர்ந்து காதுவரை நீண்ட நயனயுகளமும் ஊசலையுமாட்டுவிக்கும் செவியும் செண்பகமலர் நிகர்க்கும் மூக்கும் பவளம்போன்ற செவ்விதழும் முத்துக்களையும் முல்லையரும்பையும் ஒத்ததந்தபந்தியும் பாலெனவெளிறாது, கனியெனவழியாது, பசுந்தேனெனச் சிதறாது, கிளிபோற் குளறாது பட்டமரமும் தழைக்கச்செய்யும் மென்மொழியும் பாஞ்ச சன்னியம்போன்ற கந்தரமும் பூதரத்தையும் வென்ற பயோதரமும் அமைநிகர்க்கும் தோளும் யாழ்போலு முன்கையும் காந்தண்மெல் விரலார் கமலநிகர் செங்கையும் தனங்களாமம்போருகமுகையிரண்டைப் பயந்தவோர்நாளமென்னுமயிரொழுங்கும் முயற்கொம்பொத்த விடையும் துதிக்கையெனத் துதிக்கைக் கேற்றதுடையும் அலவன்போன்ற முழந்தாளும் மாரனெக்காளமெனும் கணைக்காலும் பந்தெனும் பரடும் திருப்புதல்வன் திருப்புகழ்வரை புத்தகமென்புறவடியும் அனிச்சமலர்படினும் கன்றுமெல்லடியும் பெற்றுநற்பருவமுற்று நவமணிகளழுத்தியியற்றிய பொற்பணிகளும் ஜெகஜ்ஜோதியாயிலங்கும் உடையாளாய் உடைமாதருமால்கொள விளங்கினள். அன்னவள் ஓர்நாள் கனவிடை விடைபோனடையும் அரிபோலிடையும், கரிகரம்போல் துடையும் முகிலெனு முடலும் அஷ்டமி

சந்திரனை நிகர்த்தநுதலும் மதன் வில்லென வளைந்த புருவமும் அலங்காரமான சிந்தூரதிலகமும் சுவர்ணமயமான பீதாம்பரமும் மாதர் மனங்கவர் வனசநிகர் கண்களும் இருமதி மண்டலமெ னும் குண்டலமும் முல்லையரும்பொத்த பல்வரிசையும், தொண்டை யங்கனிவாயும், முழங்கால்வரை நீண்ட கரங்களும், மிக விசாலமான மார்பும் உள்ளவனும் சுந்தர வடிவுறு கந்தர்ப்பன் போன்ற வோர் காளையைக்கண்டு களிகொண்டு கண்விழித்ததுங் காணுளாகி யேங்கிக் காதலோங்கித் தன் பாங்கியர்பக்கல் நின்று நீங்கி ஏகாந்தத்தி லிவ் வாறரற்றலாயினள். என் கனவிடை வந்தென் னுள்ளங் கவர்ந்த கள்வன் யாண்டுச் சென்றனனே அவனை நனவிலும் காணப்பெறு வேனே காணப்பெறுதுயிரழிவுறுவேனே ஏனே பிரமன் கனவிடை காணும் பொருள்களை யதார்த்தத்திலெய்தி யனுபவிக்கச்செய்திலன். அத்தகைய வடிவுறு மாடவன் உலகிலிருப்பானே. விரிஞ்சன் மான விக சிருஷ்டியால் சிருஷ்டித்திருக்க முடியுமேயன்றி வேறெவ்வித முண்டாக்கமுடியும். இவ்வாறு கூறிவிட்டு மன்மத விகாரம் சகிக் காதவளாய் மன்மதனையும் அவன் பரிசரங்களையும் பின் வருமாறு உபாலம்பிக்கத்தொடங்கினள். பாவிக்குயில்காள்! பெற்றதாய் கூவெ ன்று கூக்குரலிடவும் வளர்த்ததாய் காகாவென்று கதறவும் விட் டோடும் உங்கட்குக் கருணையேது? மலையமலையிலிருந்து மலையவரும் சமீரணச் சிறுவ! நீயும் உன் நண்பனும் அக்கியும் அடுத்திருப்பின் உலகனைத்தும் பாழாக்கி விடுவீர்களென்றஞ்சியல்லவா பிரமன் உங் களை மூலைக்கொருவராய்ப் பிரித்துத்தள்ளினன்? அப்படியிருந்தும் எங்ஙனமோ மாயமாய் அவ்வன்னிக்கடுத்த திக்காம் யமதிசையிலிரு ந்து கொண்டு சந்தனசலத்திலுள்ள வாதாசனங்களின் விடம்கவர்ந் துடல் வெந்திறுமாறு வீசுகின்றனை. சந்திரனை கொடு விடப்பாம்பி ற்கு நல்லபாம்பென்று பெயர் வாய்த்ததுபோல நினக்கு மதி யென் னும் பெயரெய்தியதே. நீயோ இரவலர்க்குத் தலைவன். அதாவது பிச்சைக்காரர்களுக்குள் முதன்மையானவன், உனக்குத்தனம் படை த்தார்மகிமை தெரியாததலின் என்னுடல் புண்படக்கரங்களை நீட்டு கின்றாய். மன்மதா நின்செயலோ வியக்கத்தக்கதே, கரும்புவில்லில் சுரும்புநாண் பூட்டி இரண்டுமூன் றரும்புகளை நீட்டி மூவுலகும் வெ ன்று ஜயக்கொடி நாட்டுகின்றாய், மற்றவில்லிகளினம்புகள் ஒன்றை

இரண்டாக்கும். உன்னம்புகளோ இரண்டை ஒன்ருக்கும். நீமுக்கட் கடவுள் நுதல்விழியின் அனலால் வெந்துடல் வீந்தாய் என்பது பொய். உனக்கு "அனங்கன்" என்று பெயரிருப்பது தன்னிலும் உத்தமனில்லாதவனை "அநுத்தமன்" என்பது போல நின்னிலும் பலத்த சரீரம் வேறெவர்க்குமில்லாததால் உனக்கு "அனங்கன்" என்றபெயர்வந்தது. இவ்வாறு பிரலாபித்துக் கொண்டிருந்தவள் இதோ வந்துவிட்டான் என் பிராண நாதன் என்று சொல்லி அவ்விடத்தில் வந்து நின்றதன் சித்திரரேகையைத்தழுவினுள். சகி சித்திரரேகையானவள் உஷை விரக வேதனையால் பீடிக்கப்பட்டிருப்பதையறிந்து அவளைநோக்கி பிராணசகி! எந்தச் சுந்தரன்பால்நின்னந்தரங்கம் செலுத்தியிருக்கின்ருய். என்னிடம் கரவாதுரைத்தியேல் நின்மனோரதம்பூரணம்செய்குவன்என்ருள். உஷைசித்திரரேகையைப்பார்த்துப் பிரிய சகி! யான் நேற்றிரவில் கண்கவர் வனப்பினனும் ஓர் யௌவன புருஷனை என்சொற்பனத்திற் கண்டேன், எவ்வகையாலாயினும் அன்னவனையென்பால் கொணர்ந்துசேராயேல் யான்உயிர்துறத்தல்தவருதென்றனள். உடனே சித்திரரேகையானவள் திரிபுவனங்களிலுமுள்ள வடிவிற்சிறந்த வாடவரைச் சித்திரத்திற் றீட்டியுஷைக்குக் காட்டவவள் தன்கனவில்வந்தவன் மானிடனேயென்னு மூறுதியால் மானிடர்க்குள் அங்கம் வங்கம் கலிங்கம் காம்போசம் சர்நாடம் லாடம் விராடம் மராடம் சிந்து கோசலம் முதலிய நாட்டரசர்களையும் ராஜகுமாரர்களையும் பார்த்து அவரலரென நீக்கிவிட்டனள். பின்பு யாதவவரசரைச்சித்திர ரேகைகாட்டத் தொடங்கினள். கண்ணனைக்காட்டவும் உஷைக்கு முகமலர்ச்சியும், பிரத்தியும்நனைக்காட்டிடவும் நாணமும், அநிருத்தனைக்காட்டவும் மூர்ச்சையு முண்டாயிற்று. உடனே சித்திரரேகையானவள் தன் சகியின் இருதயம் சூறையிட்டவன் அநிருத்தனேயெனத்தேர்ந்து பனிநீர் வாரி உஷையின் முகத்திற்றெளித்து அவள் களையாற்றித் தேற்றுவித்து அநிருத்தனைக் கொண்டுவருவதற்காகத் துவாரகை நோக்கிச் சென்ருள். அவ்விடத்திற் கண்ணபிரான் அரண்மனையில் எழாவது மாடியில் நவரத்தினமயமான பள்ளியறையில் அன்னத்தூவி யமளியில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த அநிருத்தனை மெல்லென வெடுத்துத் தன்னிரதத்தேற்றி மாகிஷ்மதிபுரம்கொண்டுவந்து

உஷைமுன் வைத்துவிட்டாள். உஷையும் பேரானந்தம்கொண்டாள். அநிருத்தனும் கண்விழித்துப்பார்த்து இரதியைப்பார்க்கிலும்வடிவிலழகிய உஷையைக் கண்டு மோகங்கொண்டான். சித்திரரேகையானவள் அநிருத்தனைநோக்கி ஐய! இவள் இம்மாகிஷ்மதிபுரத்தலைவனாகிய பாணாசுரனுடைய செல்வக்குமாரி. நின்மேற் காதல்கொண்டாளாதலால் அவளை யங்கீகரித்துக் காந்தருவ விவாகம் செய்து கொண்டு நீவிரிருவரும் லக்ஷ்மீ நாராயணர்போலி வின்பம் நுகர்ந்துவாழக்கடவீர் என்றாள். அவள் சொல்லியபடி யவ்விருவரும் காந்தருவ மணம் புரிந்து மன்மத சாம்ராஜ்பத்தை யனுபவித்து இன்பம் நுகர்ந்திருந்தனர். இவ்விதமாகத் திங்கள் மூன்று கழியவும் இச்செய்தி பாணாசுரனுக்குத் தெரிந்துவிட்டது. உடனேயவன் கோபாவேசம் கொண்டு கண்களில் தீப்பொறி சிதற அந்தப்புரம்புக்குத் தன்னருமைப் புதல்வியையும் மாரகுமாரனையும் தன் வாளுக் கிரையாக்கத் துணியுந் தருணத்தில் ஓர் அசரீரிவாக்கு "அடே வாணாசுரா! ஸ்திரீ ஹத்தி செய்யாதே. இவ்விருவரையும் கொல்லாதிருத்தியேல் நினக்குப் பரம புருஷனுடைய திருவருளுண்டாகின்றது" என்றுரைத்தது. இதைக்கேள்வியுற்ற பாணாசுரன் அநிருத்தன் மீது நாகாஸ்திரப் பிரயோகம் செய்து அவனைச் சிறையிலிட்டான்.

இப்பால் கலகம் விளைப்பதே தொழிலாகக் கொண்டு திரிலோக சஞ்சாரம் செய்யும் யாழ்முனிவன் துவாரகை சென்று கண்ணனைக் கண்டான். ஸ்ரீகிருஷ்ணனும் நாரதரை அர்க்கியபாத்தியாதிகளால் உபசரித்து உசிதமான வாசனத்தில் வீற்றிருக்கும்படி செய்து பின்வருமாறு கூறினர்: மஹாரிஷியே! இப்போதென்னில்லம் தூயதாகியது. யானும் கிருதார்த்தனானேன். ஏனெனில் புண்ணிய புருஷர்களுடைய ஸேவை யாருக்குக் கிடைக்குமோ அவர் சகல புண்ணிய க்ஷேத்திராலய தரிசனம் செய்த பலனையும் புண்ணிய தீர்த்தங்களாடிய பலனையும் ஒருங்கடைவர். இவ்வாறுபசரித்த மாதவனை நோக்கி வல்லகி மாதவன் ஐய!சகல க்ஷேத்திர தீர்த்தாடன பலனனைத்தும் நினக்கர்ப்பிதமாக்கி னன்றோ பயனெய்துவது? எந்தப் புண்ணிய கிருத்தியம் செய்யினும் முடிவில் "ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்" என்னிலன்றோ பலப்பிராப்தியாகும்? யானிவணெய்தியகாரணம் கேட்பாயாக. மாகிஷ்மதிக்கரசனாகிய பாணாசுரனென்பான்

ஐயிரு நூறுகரமுடையானும் ஐமுகன் றருவரமுடையானுமாயிறுமாந்து நின் பௌத்திரனா மநிருத்தனைப் பன்னகாஸ்திரத்தால் பிணித்துச் சிறையிட்டிருக்கின்றனன். என்னலும் பன்னகப்பாயல் விட்டிந் நிலமடந்தையின் பாரம் குறைக்கவரும் பதுமநாபன் கோபானலம் குதிகொள்ளும் கண்ணிணையுடையனாகிப் பலராமன் சங்கர்ஷணன் முதலியோர்புடைசூழ ரத கஜ துரக பதாதியாம் சதுரங்கபல சமேதனாய் யுத்த சன்னத்தனானான். சாம்பன் சாத்தகி முதலிய சேனைத்தலைவர் சேனையை நடத்திவர, யானைத்திரளாம் மகர மீன்களும், ஸ்வர்ணமயமான தேர்களாம் திமிதிமிங்கிலாதி மச்சங்களும், தாவிச்செல்லும் உத்தமபரிகளாம் அலைகளும், பதாதிகளாம் நுண்மணலுமுள்ள சேனா சமுத்திரம் கொந்தளித்துப் புறப்பட்டது. அச்சேனையில் "கழலிலாக் காலும் கால வயிலிலாக் கையும் காந்தும். அழலிலாக் கண்ணு மில்லா வாடவரில்லை" போரில் முன் வைத்த கால் பின்வாங்கி யறியாராயுள்ள யோதர்கள் சகலமான ஆயுதங்களையும் தரித்துக் கவசம்பூண்டு தும்பைசூடி வீராட்டகாசத்துடன் சென்றனர். "வார்கடன் முழக்கொலிகொல் மழை முழக்கோ, சார்வ தென யாவரும் ஐயுறும்படி பேரிகைகளும் கம்புகளும் கொம்புகளும் காகளங்களும் முழங்கவும் தேருருளைகளா லுண்டாகும் ஒலி கேட்டுத் திக்கயங்களி னெஞ்சம துளங்கவும் சென்ற படையானது முன்னாட் பகீரதராதானுகமனம் பண்ணின மந்தாகினிபோற் போயினது. இப்படைத்திரள் நோக்கின் பகலவனும் மனந்துணுக் குறுவனென் றேவச் சேனையாற் கிளம்பிய தூளிப்படலம் ஆதவற்குத் திரையிட்டதுபோன் மறைத்தது. இங்ஙனம் சென்றசேனையானது மாகிஷ்மதிநகரஞ் சென்றப் புரியை முற்றுகையிட்டது. உடனே அவனுள்ள தைத்தியர் தானவர் முதலியோரும் பிரமதகணங்களும் உருத்திரன் முதலியோரும் போர்புரியச் சன்னத்தராயினர். அப்போது கோட்டையின் குணதிசைவாயிலில் கண்ணனுடன் முக்கண்ணனும் தெனதுவாயிலில் அலாயுதனுடன் ஐங்கரனும் குடதிக்கில் சாத்தகி முதலானவர்களுடன் நந்தியும் தனதனுசையிற் குமாரனு மாரனுமெதிர்த்தனர். தென்றிசையினடந்த போரில் பலராமன் நெய்யிட்ட வடிக்கணை ஐந்தேவ வவற்றையைங்கரன் பத்துச் சரங்களேவித் துணித்துத்தானும் ஐயாயிரங்கணைகள் ஏவப்பலபத்

திரன் ஐந்நூறுகணைகளாலூறினன். உடனே சிவசுப்பொக்கிய கய முகனும் பாசம் வீசவே கேசவன் முன்னோன் தேசுறுவாளாற் பாச மிறத்துணித்து லம்போதரனைக்கதையாற் கதங் கொண்டு புடைக்க வவனும் வீறிட்டுத் துதிக்கையையுயரத்தூக்கி யங்குசத்தாற் றாக்கி னன். உடனே நீலாம்பரன் தன்னலாயுதத்தால் அங்குசமும் ஐங் கரன் கொம்பொன்று மிறுகப்புடைக்கவும் வீறிட்டுக் கதறியோ டித்தன் தாதைபாற் புக்கனன். அதுமுதல் விநாயகற்கு ஏகதந் தன் என்ற பெயரெய்தியது. நந்தி தன் கணங்களுடன் சாத்தகியை யெதிர்த்துத்தாக்கினன். சாத்தகியும் நந்தியும் ஒருவர் மீதொருவர் சரமாரிபொழிந்தனர். சாத்தகி கதாயுதத்தால் நந்தியின் மார்பிற் புடைத்தான். அவனும் சாத்தகியை முசலத்தாற் றாக்கினன். அப்பால் நந்தி மாகேசுவராஸ்திரப் பிரயோகம் செய்தான். சாத் தகி நாராயணாஸ்திரப் பிரயோகம் செய்தம் மாஹேசுவராஸ்திரத் தைச் சங்கரித்தான். அப்போது நந்தியதிக பீதியெய்தியோட் டமெடுத்தான். வடபால் நடந்த வாச்சரியமான யுத்தத்தைப் புகல்கின்றேன் கேளுங்கள் முனிபுங்கவர்காள்; மகாபல பராக்கிரம சாலிகளும், மகாவீரரும், மகாதீரரும் மகாரதிகர்களும், சகலாஸ் திரசஸ்திரப்பிர யோகம் நன்குணர்ந்தோருமாகிய மாரனும் குமார னும் மிகவும் கோபாவேசத்தோடு போர்புரிந்தனர். பீதாம்பரன் புத்திரன் திகம்பரன் புதல்வனை மூன்றுகணைகளேவித் தாக்கினன். அவனும் கணைகளைந்தேவி யம்முக்கணைகளையும் தொலைத்தான். கண் ணன்மதலை சரவணமதலைமேல் அஷ்டாஸ்திரப்பிரயோகம் செய்தா ன். அவனும் கந்தர்ப்பன்மேல் இருபது வடிவாளிகள் பிரயோகித் தான். அவ்விருவரும் ஒருவர் மேலொருவர் ஆயிரம் பதினாயிரம் லக்ஷம் பத்துலக்ஷமுதலிய சங்கியையுள்ள பாணங்களை வருஷாகால மேகம் போற்பொழிந்தனர்.

இஃது பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திரகாண்டத்தில் ஸ்ரீ க்ஷேத்திர மகத்துவத்தில் அநிருத்த பந்தனம் என்ற ஆறுவது அத்தியாயம்.

---

ஸ்ரீ ஜெ தாஸாநுதாஸாய நம:

# ஏழாவது அத்தியாயம்.

வெய்யகுப வதனன்முதற் கணுதிபர்க ளுடனமரனும் வெங்கிட் டோடப்
பையரா வணையன்முத லோர்பொருத பின்சமர்க்குப் பரிந்து வந்த
மையெனுமெய்க் கொடுவாணன் ருேட்பத்து நூற்றிணையு மால்தன் செங்கைச்
செய்யசுட ராழியினல் வீழ்த்தவிதம் தேர்ந்தமட்டும் செப்பு வாமால்

அப்பால் முருகவேளும் வேளும் தங்கள் விற்களைவைத்துவிட்டு பிண்டிபாலம் சூலம் தோமரம் கதைமுதலியவாயுதங்களால் கொடும் போர் புரிந்தனர். இவ்வாறு பொருத வாயுதங்களா லுண்டான காயங்களால் அவ்விருவர் காயங்களும் நிரந்தரமாய்ப் பூத்த முருக்க மரம்போற்ருேன்றின. அப்புறம் ஒருவர் மீதொருவர் திவ்வியாஸ்திரங்களையபிமந்திரித்துப் பிரயோகம் செய்தார்கள். குகன்மாரன் மீது பன்ன காஸ்திரத்தைப் பிரயோகித்தான். மன்மதன் கருடாஸ்திரப் பிரயோகம் செய்து நாகாஸ்திரத்தையழித்தான். சுப்பிரமணியன் ஆக்கிநேயாஸ்திரத்தைப் பிரயோகித்தான். மதன் வாருணஸ்திரப்பிரயோகம் செய்து அதை மாற்றினுன். கந்தன் தாமஸாஸ்திரப் (இருட்டு)பிரயோகம் செய்யவே கந்தர்ப்பன் சூரியாஸ்திரப் பிரயோகம் செய்து அதையொழித்தான். குமரன் மன்மதனுடைய சாரதியைக்கொன்ருன். மாரனும் பெரியவுலக்கை கொண்டு கார்த்திகேயனுடைய மயில்வாகனத்தின் மூக்கிற் புடைக்கவே யம்மூக்குச் சிதைந்து விட்டதால் அம்மயூரம் கோரசப்தத்தோடு குகனையும் சுமந்தபடியே உருத்திரன் பாலோடியது. பின்னர் கேசவனும் சிவனும் எதிர்த்துப்போரிட்டார்கள். மகாரதிகர்களும் மகாவீரர்களும் மகா பலபராக்கிரமசாலிகளும் ஆகிய வவ்விருவரும் இரண்டுமதயானைகள் போலவும் கோபாவேசம் கொண்ட விரண்டெருதுகள் போலவும் மூர்க்கம் கொண்டவிரண்டு மிருகேந்திரர்கள் போன்றும் சஞ்சாரஞ் செய்யுமிரண்டு பர்வதங்கள்போலவும் கொந்தளிப்புடனிருக்கும் இரண்டு சமுத்திரங்கள்போலவும் சகலதிவ்வியாஸ்திரதாரிகளாய் யுத்த சன்னத்தராயினர். மாதவன் தன் சார்ங்கமென்னும் வில்லையேந்தித்

தன் நவரத்தினகசிதமானதேர்மீது ஏறினன். மாதவன் தன் பிநா கம் என்னும் சாபத்தைக் கரத்திலேற்று மணிமயமான இரதத்தில் ஆரோகணித்தான். கண்ணன் முதலில் ஐந்துபாணங்களைப் பிரயோ கிக்கவே முக்கண்ணன் ஐந்து பாணங்களேவி யவற்றை யழித்தான். பின்பு ஒருவர்மீ தொருவர் நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்துலக்ஷம், கோடிமுதலிய சங்கையுள்ள அஸ்திரங்களைப் பொழிந் தனர். இருவரும் பொழிந்த சரவருஷங்களால் பகலவனுடலம் மறைந்தது. சேனைகள் நெருங்கிப் போரிட்டபோது கிளம்பிய தூளி யால் கடல்களும் தூர்ந்தன. இந்தக்கோரமான யுத்தத்தைக்கண்டு நடுங்கி மலைகளும் ஓடத்தலைப்பட்டன. பூகம்பம் முண்டாயிற்று. வானிலிருந்து நட்சத்திரங்களுதிர்ந்தன. போர்புரிதலைக் காணவந்து அந்தரத்திலிருந்த சித்தர் இயக்கர் சாரணர் முதலியோர் ஓட்டமெ டுத்தனர். யுத்தத்தில் சிதைவுற்ற தேர்கள் திடர்திடராகக்கிடந்தன. யானைகள் குதிரைகள் காலாட்கள் அறுப்புண்டு சின்னபின்னமாய்க் கால்மாடு தலைமாடாய்க் கிடக்க இரத்தப் பிரவாகம் ஓடியது. சகல மான அஸ்திரசஸ்திரங்களைப் பிரயோகித்துக் கொடும்போர் நெடும் போது புரிந்தும் அவ்விருவரும் களைத்திலர். அப்போதுஉருத்திரன் மகா பயங்கரமான தாபஜ்வராஸ்திரம் பிரயோகம் செய்தான். கண் ணன் சிதாஜ்வராஸ்திரப்பிரயோகம் செய்ததை மாற்றினன். அவ் விரு சரங்களும் லோகநாதனை நமஸ்கரித்துவிட்டுத் தம் உலகம் புக் கன. இந்த ஹரிஹர யுத்தத்தை யாவர் கேட்கின்றனரோ அவர்கள் ஜ்வரம் முதலிய வியாதிகளினின்று நீங்கி யரோக திடகாத்திரரா யின்புறுவர். அப்புறம் தண்டசக்கிரம் காலசக்கிரம் மாகேந்திர சக் கிரம் முதலியவற்றையும் பிரமசிரஸ், கந்தருவாஸ்திரம், சித்தாஸ்தி ரம் வித்தியாதராஸ்திரம், மானவாஸ்திரம், வாருணாஸ்திரம், தர்மபா சம் காலபாசம், ஐந்திராஸ்திரம், ஆக்கிநேயாஸ்திரம், யமாஸ்திரம், நைருதாஸ்திரம் வாயுவியாஸ்திரம் முதலியவைகளையும் ஒருவர்மீது ஒருவர் பிரயோகித்தார்கள். கோபாலன் கோபாவேசங்கொண்டுதன் வில்லைக்குண்டலாகாரமாக்கி யமோகமான அஸ்திர வருஷம்பொழிய வே யுருத்திரனுடைய சேனை சின்ன பின்னமாய் ஓடத்தலைப்பட் டது. அப்பால் மோகனாஸ்திரத்தை யபிமந்திரித்து பன்னகப்பா யலான் பன்னகாபரணன் மீது பிரயோகிக்கவே யுமாபதி பிநாகினு

யற்றுப் பூமியில் விழுந்து விட்டான். இதைக்கண்டதும் பொறுராகி வந்தெதிர்த்த ஐந்திரன் குகன் முதலியோரனைவரும் நிலை பெறுது ஓடிவிட்டனர். அப்போது பாணாசுரன் போர்க்கோலம் பூண்டு கிரீடஹார கேயூராதிகளணிந்து கவசம் பூண்டு தன் இரதத்திலேறி சகலாஸ்திர சஸ்திரதாரியாய் யுத்தரங்கத்தில் வந்து கண்ணனை யெதிர்த்தான். கண்ணனும் பொன்மலை மேற்றோன்றும் நீலமலைபோல கருடாரூடனாய் சார்ங்கபாணியாய் நின்று அவ்வசுரன் பிரயோகித்த சர்வாஸ்திரசஸ்திரங்களையும் நாசமாக்கியவனுடைய சாரதியைக் கொன்று தேர்ப்புரவிகளை வீழ்த்தித் தேரையும் சிதைக்கவே அவ்வவுணன் பாதசாரியாய் தன் ஆயிரம் கரங்களாலும் பொரத்தொடங்கினன். உடனே பகவான் சுதர்சனாழ்வானை ஸ்மரிக்கவே யச்சுடராழியானது வந்து வாணன்றோள்களிலிரண்டொழிய மற்றவைகளைத் துணித்து வீழ்த்தியது. அப்போது மந்திரமாமலர் கொண்டு மறைந்தவராய் வந்தந்தரத்தினின்ற தேவர்கள் புஷ்பவருஷம் பொழிந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. தேவரனைவரும் எம்பெருமானைப்பலவாறுகத் தோத்திரித்தனர். அந்தச்சமயத்தில் கௌரியானவள் பகவான் அருகில் வந்து பின்வருமாறு துதிக்கலாயினள்: கருணாநிதியே ஜனார்த்தனா வாசுதேவ ஆதிதேவ மாதா பிதா முதலாம் சகல பந்துக்களும் நீயே, பரம புருஷனும், பரஞ்சோதியும், பரந்தாமனும், பராத்பரனும், நீயே. சர்வலோக சரண்யன் நீயேயன்றோ; பக்தவத்ஸல னென்றதிருநாமம் உனக்குள்ளதன்றோ; நீ எனக்கிந்தருளிய சர்வமங்களை யென்னும் பெயர் நிலைபெறுமாறு என்பர்த்தாவையுச்சீவிக்கச் செய்தருள வேண்டும். என்று பிரார்த்தித்த பர்வதராஜ புத்திரிக்கிரங்கிக் கண்ணபிரான் மோகனாஸ்திரத்தை யுபசங்காரம் செய்யவே சிவன் தூங்கி யெழுந்தவன் போல் எழுந்து கண்ணனடிகளில் விழுந்து அபசாரக்ஷமை கேட்டுப் பகுப்பிரகாரமாய் ஸ்தோத்திரம் செய்யப்புக்கான். விசுவரூபியும், வேதவேத்தியனும் சர்வதேவ ஸ்வரூபியுமான உனக்கு நமஸ்கரிக்கின்றேன். உன்முகா நிலத்திலிருந்துண்டாகிய வேதங்கள் சகலதேவதைகளுக்குள்ளும் உயர்ந்தோன் நீயேயென்று முறையிடுகின்றன. சகலமான ஜகத்தும் உன்னிலிருந்துண்டாகி யுன்னில் நிலைபெற்று நின்று முடிவில் உன்னிடத்திலேயே லயமடைகின்றன. ஸ்ரீ

தேவி பூதேவி நீளாதேவியாகிய விவர்க்குப் பிராணகாந்தா உன் மகிமை யாவராலும் எண்ணுதற்கும் துதித்தற்கும் அசாத்தியமானது. நீயே சகலராலும் தியானிக்கத்தக்கவன்.

"சேராதன வுளவோபெருஞ் செல்வர்க்கு வேதம் செப்பும்
பேராயிரம் திண்பெரும்புயமாயிரம் பெய்துளவத்
தாரார்முடி யாயிரம் குருகூர்ச் சடகோபன்சொன்ன
ஆராவமுதக் கவியாயிரம் அவ்வரியி னுக்கே."

என்றபடி சஹஸ்ரநாமனும், சஹஸ்ராக்ஷனும், சஹஸ்ரசிரனும், சஹஸ்ரபாதனும் நீயேயன்றோ. பிராமணர் உன்முகத்தினின்றும், க்ஷத்திரியர் நின் புஜங்களினின்றும், வைசியர் உன் தொடைகளினின்றும, சூத்திரர் உன் பாதங்களினின்றும் உற்பத்தியாயினர். உன் இருதயத்தினின்று சந்திரனுண்டாயினன். சூரியன் நினது நேத்திரங்களினின்றுண்டானான். உன் முகத்தினின்று இந்திரனும் அக்கினியும் உண்டாயினர். நின பிராணனிலிருந்து வாயு உதித்தான். நின் திருவுந்தியிலிருந்து அந்தரிக்ஷம் உண்டானது. சிரவினின்றும் திவியும் பாதங்களினின்று புவியுமுண்டாயின. ஸ்ரீதேவியும் பூதேவியும் நினக்குப் பத்தினிகளாயினர். உலகிற்கெல்லாம் நாதனுவான் நீயே.. பார்க்கப்பட்டும் கேட்கப்பட்டும் இருக்கும்ஜகமெல்லாம் காரணனாகிய நீ உள்ளும்புறம்பும் வியாபித்திருக்கின்றாய். ஆதலாலுலகனைத்திற்கும் சரணியனுமாகின்றவன் நீயே. நின்னைத் தவிர எனக்கு வேறுதஞ்சமில்லையென்று பலவாறாகமுக்கண்ணன் ஸ்தோத்திரம் செய்தான்.

இஃது பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திரகாண்டத்தில் ஸ்ரீ க்ஷேத்திர மகத்துவத்தில் பாணாசுர கண்டனம் என்ற ஏழாவதத்தியாயம்.

---

ஸ்ரீ: ஸ்ரீதாரா நாராயணாய நம:

## எட்டாவது அத்தியாயம்.

---

ஆகேற்ற முறுசுதன்முன் னுங்கணங்கள் புடைசூழ
வரன பணிந்தே
பாகேற்ற மொழிப்பதுமைப் பதியேநீ கதியென்று
பரவமாலும்

வாகேற்ற முடையபுயன் வாணன்மக ளுடையினையம் மாரன் சேய்க்குச்
சீகேத்தி ரத்துவந்து வந்துமணஞ் செய்தவிதந் தெரியச் சொல்வாம்.

தன்னைப் பகுப்பிரகாரமாக ஸ்தோத்திரம் செய்த சங்கரனை நோக்கிப் பகவான் நின் ஸ்தோத்திரங்களால் மகிழ்வுற்றேன். நினைக்கு யாது வரம் வேண்டும், என்று கேட்கச் சந்திரசேகரன் பகவானைப் பார்த்துச் சுவாமி இந்தப் பாணசுரன் என் பக்தன் அறியாமையால்நின்பால் அபராதமிழைத்தனன். அவன் அபராதத்தை க்ஷமித்து அவனை இரக்ஷிக்கவேண்டும். என, அவ்வரனுடைய வேண்டுகோளின்படியே எம்பெருமான் சக்கிராயுதத்தையும் சம்ஹாரஞ்செய்யவே யது அவ்வசுரன் தோள்களிரண்டைத் துணியாதுவிட்டது. அப்போது பாணசுரன் கண்ணன் திருவடிகளில் வீழ்ந்தெழுந்து இரண்டு கரங்களால் அஞ்சலிசெய்து சுவாமி அடியேன் நின்திருவடிகளுக்கு ஆளாயினேன். தேவரீர் அடியேன் கிருகத்திற்கு எழுந்தருளி யவ்வில்லத்தைப் பாவனமாக்க வேண்டும். என்குமாரி உஷைக்கும் தேவரீர் பௌத்திரன் அநிருத்தனுக்கும் இவிடத்திலே விதி முறைப்படி விவாகம் செய்துகொண்டு ஊர்க்கு எழுந்தருளவேண்டும். பகவான் அந்த மாகிஷ்மதிபட்டணத்தில் மூன்றுநாளிருந்துவிட்டு உஷா விவாகம் துவாரகையில்தான் நடத்தவேண்டும் என்று சொல்லிப் பாணசுரன் முதலிய அனைவருடனும் துவாரகை நோக்கிப் புறப்பட்டுச் செல்லும் மார்க்க மத்தியில் ஸ்ரீ க்ஷேத்திரத்திலிருந்தும் தங்கால பருவதத்திற்கு நேராக வரும்போது அவ்விடத்தில் அருந்தவம் புரிந்து கொண்டிருக்கும் புரூரவ சக்கிர வர்த்தியைப் பகவான் கண்ணுற்றார். அவ்வரசன் ஏகபாதத்தி னின்று இரண்டு கண் பார்வையும் நாசி நுனியில் நிறுவி பிரமத்தினிடம் தன் இருதயத்தை லயிப்பித்து "பொருந்து முழைப்புற் றென்றே புயங்கமூரப் பூங்கொடிகள் மரனென்று பாஙகேசுற்ற" ஸ்தாணு பூதனாய்த் தவம் புரிந்து கொண்டிருந்தான். பகவான் திருவருள் சுரந்து தாருகனை நோக்கி இரதத்தை யவ்விடத்திலேயே நிறுத்தும்படி கட்டளையிட் டருளினர். அவ்வாறே சாரதியும் ரதத்தை நிறுத்தினுன். வைகாசி மாசத்தில் திரு விசாகத்தில் பௌர்ணமி தினத்தில்

சுக்கிரவாரம் புரூரவ சக்கிரவர்த்திக்கு எம்பெருமான் பிரத்தியக்ஷமாயினர். புரூரவ சக்கிரவர்த்தியும் நீருண்ட மேகமென்னும் தேகமும், ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தினுலான பீதாம்பரமும், முழங்கால் வரை நீண்ட கரங்களும், வனமாலிகையும், ஸ்ரீவத்ஸமும், கௌஸ்துவமும், சங்கம் சக்கிரம் வாள், கதை, சார்ங்கமாகிய பஞ்சாயுதங்களும் பிரகாசிக்கக் கந்தர்ப்பகோடி சுந்தரனுகி கருணைரஸ மொழுகும் திருக் கண்களோடு கூடிய திருமுக மண்டலம் மேசாபிக்க ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளுடன் பிரத்தியக்ஷமாகிய ஸ்ரீநாரயணனைக் கண்டு களிகொண்டு அடியற்ற மரம்போல் வீழ்ந்து தண்டம் சமர்ப்பித்துப் பலவாறுகத் துதித்தான்,

புரூரவஸ் தோத்திரம்:—கருட கேதன தேவரீரே சகலப் பிரபஞ்சத்தின் உற்பத்திக்கும் ஸ்திதிக்கும் லயத்துக்கும் காரணமானவர். பிரமன் உருத்திரன் முதலிய சகல தேவஸ்வரூபமாயினவரும் தேவரீரே. கதியற்ற வர்க்கெல்லாம் கதியாயிருக்கும் தேவரீரைச் சரணமடைந்தேன். அடியேனைக் காத்தருள வேண்டும். யாக ரூபமானவரும் யாகத்தைப் புசிப்பவரும் தேவரீரே. சந்திரர் சூரியர்களை நயநமாக வுடையவரும் யோகிகளுடைய நிர்மலமான ஹிருதயத்தில் வீற்றிருப்பவருமாகிய தேவரீரைச் சரணம் புகுந்தேன். என்னைக் காத்தருள வேண்டு மென்று ஸ்தோத்திரம் செய்த மதிகுலதிலகனும் மன்னர் மன்னன் மீது பூரணகிருபை பாலித்துப் பகவான் கூறுகின்றூர். ராஜ சேகரா நின்றவத்திற்கும் ஸ்தோத்திரத்திற்கும் மனமுவந்தேன். நினக்கு வேண்டும் வரங்களை வரிப்பாயாக. என்னலும் புரூரவர்ஸ்வாமி நின்றிருவடிகளி லடியேற் கிடையறுத பக்தி யிருக்கவேண்டும். தேவரீர் இவ்விடத்திலேயே நித்திய வாசம் பண்ணவேண்டும். இந்த இரண்டு வரங்களை யடியேற்குத் தந்தருளவேண்டும் என்றூர். பகவான் புரூரவரை நோக்கிச் சொன்னதாவது. என் பௌத்திர ஞகிய அநிருத்தன் விவாகம் நாளைக்குத் துவராகையில் நடாத்தி விட்டு இவ்விடம் வந்து நின் மனோதரப்படி யிருக்கின்றேன். என்றவுடனே புரூரவர் அநிருத்த விவாகம் இவ்விடத்திலேயே நடத்தியருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். உடனே பகவான் விசுவகர்மாவை யழைத்து அவ்விடத்தில் விசேஷமணியமாக விவாகத்திற்கு வேண்டிய மாட மா

ளிகை முதலிய வற்றை நிருமிக்க வேண்டும் என்று, ஆஞ்ஞாபிக்கவே யவனும் அவ்விடத்தில் நவரத்தின கசிதமான மாடமாளிகைகள் கோபுரங்கள் ஜலாலைகள் வாஜி சாலைகள் யாகசாலைகள், நாடக சாலைகள் முதலிய வைகளைச் சிருஷ்டித்துக் கலியாணத்திற்கு வேண்டிய சகல சாமக் கிரிகளும் சன்னத்தமாக்கி விட்டான். அப்போது எம்பெருமான் விவாகத்திற்கு வரவேண்டிய சகலரும் வந்து சேர வேண்டும் என்று ஸ்மரிக்கவே பிரமாதி சகல தேவர்களும் அவர்களுடைய பத்தினிகளும் சகலமான ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் துவாரகையிலிருக்கும் யாதவ வீரர் முதலியோர் யாவரும் மற்றுமுள்ள சகல தேச வாசர்களும் பந்து மித்திர களத்திர சமேதர்களாய் வந்து சேர்ந்தனர். வந்தவரனைவர்கரும் யதோசிதமாக வுபசாரம் செய்து நல்ல சுப முகூர்த்தத்தில் உஷையை யநிருத்தனுக்குப் பாணிக்கிரஹணம் செய்வித்து சப்தபதி முதலிய விவாகக் கிரிகைகள் யாவும் குறைவின்றி நடாத்தி விவாகத்திற்கு வந்திருந்த சகல மானவர்களுக்கும் திவ்வியமான பக்ஷியங்களுடன் கூடிய போஜனமும் சந்தன தாம்பூலாதிகளும் உதவி விவாகம் பேராடம்பரத்துடன் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணன் வந்திருந்தவரனைவர்க்கும திவ்வியமான பீதாம்பரங்கள் ஸ்ரேஷ்டமான திரவியம் முதலிய வற்றை யுதவித் திருப்தியாக அவரவர் ஊர்க்குப் போகும்படி யனுப்பிவிட்டு அந்த ஸ்ரீ க்ஷேத்திரத்திலேயே தன்னுடன்வந்த பார்வதீ காந்தனுடனும் பாணாசுரனுடனும் உஷை யநிருத்தனாகிய வதூவரர்களுடனும் புரூரவ சக்கிரவர்த்தியின் வேண்டுகோளின்படி ஸ்ரீதேவி பூமிதேவி நீளாதேவி சமேதராய் ஸ்ரீமந் நாராயணன் நித்திய வாசஞ் செய்தருளினார்.

இஃது பிரமாண்ட புராணத்தில் க்ஷேத்திர காண்டத்தில் ஸ்ரீ க்ஷேத்திர மகத்துவத்தில் உஷாநிருத்த விவாகம் என்ற எட்டாவது அத்தியாயம் சகல சம்பூரணம்.

## வாழ்த்து.

திருத்தண்கா லூர்வாழச் செங்கமலத் தாயார்
மருத்தங்கு மேவடிகள் வாழக்—கருத்தினிலே
நின்றதிரு மால்வாழ நேயமிகு மிச்சரிதம்
என்றென்றும் வாழ்க வினிது.

சேங்கமல வள்ளித்தாயார் திருவடிகளே சரணம்.

பரீதாபி வருஷம் தை மீ 5௳ வெள்ளிக்கிழமைத்தினம் இப்புராணம் எழுதி முற்றுப் பெற்றது.

திருத்தங்கல் ஸ்தலபுராணம் முற்றிற்று.

22.8.21
N B
18029